Registered M. 916

# THE VEDANTA DIPIKA

A RELIGIOUS & PHILOSOPHICAL MONTHLY.

Vol. VIII. January 1918. No. 4.

*Editor.*—DEWAN BAHADUR T. T. RANGACHARIAR, B.A., B.L.

# வேதாந்த தீபிகை.

ஸம்புடம் 8.] பிங்கள௵ தைமீ [ஸஞ்சிகை 4

1. பத்ராதிபரின் குறிப்புகள் ... ... ... ... 153
2. வேதாந்த ஸங்க்ரஹம்
ஸ்ரீ. உப. எஸ். கோபாலஸ்வாமி ஐயங்கார் ... 163
3. கடிதங்கள் ... ... ... ... ... 171
4. ஸபையின் வருஷாந்த அறிக்கை ... 178
5. சில விஶேஷ குறிப்புகள் ... 185
6. ஏழாவது ஸ்ரீ வைஷ்ணவ மஹாஸங்கம் ... 187
7. ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தம்
ஸ்ரீ. உப. சதுஶ்ஶாஸ்த்ர கல்பதரு ஶேஷாசார்யர் ... 1

PUBLISHED BY THE SECRETARY SRI V. S. SABHA.

K. R. Press, Madras.

*Copy-right reserved.*

Annual Subscription Rs. 3-0-0] [Single Copy As 4.

# ஸ்ரீ வேதாந்த தீபிகை.

## இப்பத்ரிகையின் மூக்கிய நோக்கங்கள்.

(1) உபநிஷத்துக்களிலும், ப்ரஹ்மஸூத்ரம் பகவத்கீதை முதலான க்ரந்தங்களிலும், ஆழ்வாராசார்யர்கள் அருளிச்செய்திருக்கும் ஸ்ரீஸூக்திகளிலும் இருக்கும் விஶிஷ்டாத்வைத மதத்தின் தத்வங்கள் வெளியாக்கப்படும்.

(2) அத்வைதம், த்வைதம் முதலான மதங்களின் ஸ்வபாவங்களும் அந்தந்த மதங்களை ஆராய்ந்தவர்களைக்கொண்டு எடுத்துக் கூறப்படும்.

(3) தைவபக்தி முதலான நற்குணங்களைத் தெரிவிக்கும் கதைகளும் வெளிவரும்.

## இதைப்பற்றி சில அபிப்ராயங்கள்.

(1) **இந்து நேசன் :—**—————————12 - மாத பத்திரிகையின் கிரயம் ரூபாய் இரண்டாயிருப்பினும், அமைக்கப்பெற்ற விஷயங்களின் சீரும், பாஷையின் நடையும் விலையில்லா மாணிக்கங்களென்றே சொல்லலாம்.

(2) மதிராஸ் ப்ரெஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதரான மஹாமஹோபாத்தியாயர் வே. ஸ்வாமிநாத ஐயர் : இது தென்னாட்டுப்பத்திரிகைகளுக்குள் முதன்மையான தென்று சொல்லலாம்.

(3) மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்ப் பத்திராதிபர் :—

..............இதில் விஸிஷ்டாத்வைத மத ஸம்பந்தமான உபந்யாஸங்களும் வேதாந்தார்த்த விசேஷ விசாரங்களும் புராணகதைகளும் ஆசார்ய சரித்ரங்கள் முதலியவை வெளியிடப்படுகின்றன. இதற்கு விஷயப்ரதானம் செய்பவர்கள் உபயவேதாந்த பாரங்கதர்களாகவும் சாஸ்த்ர ஸம்பந்நர்களாகவும் காணப்படுதலால், பாரலௌகிக புருஷார்த்தங்கள் ப்ரமாணங்களைக்கொண்டு இதில் நன்கு விவரிக்கப்படு மென்று தோன்றுகின்றது.

## NOTICE.

Subscribers are requested to quote the wrapper number in all their communications to the manager. Intending advertisers are requested to apply to the Manager for terms.

☞ பத்ரிகைக்கு விஷயங்கள் எழுதுவது "பத்ராதிபர் வேதாந்த தீபிகை, திருவள்ளூர், செங்கல்பட்டு ஜில்லா" என்கிற விலாஸத்திற்கும், கடிதங்கள் அனுப்புவதும் கட்டணம் கட்டுவதும் விலாஸ மாறுதல்கள் அறிவிப்பதும் மற்றெல்லா விஷயங்களும் விலாஸத்தில் குறித்திருக்கும் நம்பரைக் கண்டு, "மானேஜர், வேதாந்த தீபிகை, 11, கேஶவப்பெருமாள் ஸந்நிதி வீதி, மயிலாப்பூர், மதிராஸ்" என்கிற விலாஸத்திற்கும் அனுப்பப்படவேண்டும்.

**வருஷம் 1-க்குக் கட்டணம் ரூபாய் 3.**

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 8.] பிங்கள௵ தைமீ [ஸஞ்சிகை 4.

த்ரிபுவனகமனம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம்
ததானே - வபுரலககுலாவ்ருதானநாப்ஜம் விஜயஸகே
ரதிரஸ்து மே அநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புகள்.

**ஆஸ்திகர்கள் யோசிக்கத்தக்க சில விஷயங்கள்.**

இந்தக் கலிகாலத்தில் லோக வ்யவஹாரத்தைச் சிந்திப்பவர்கள் மதமும் ஒருவனுக்கு ஜீவனோபாய மாகின்றதையும், மற்றொருவனுக்கு ஐஹிகத்தில் அதுஸந்தோஷ மளிக்கின்றதையும் யோசிக்கலாம். உத்ஸவார்த்தம் ஒரு ஸ்தலத்துக்குப் போகின்றவர்களெல்லோரும் பகவத் தர்சநத்தையே உத்தேசித்துப் போகின்றார்களில்லை. பகு பெயர்க்கு திவ்ய தேசயாத்ரை உத்ஸாஹப்ரதமாயிருக்கின்றது. தர்மத்தை அதிக்ரமித்து வர்த்திக்கும் பல ஸ்த்ரீ புருஷர்கள், தாங்கள் அபேக்ஷித்த பலத்தை விசேஷமாக அநுபவிக்க உத்ஸவம் காணபோவதில்லையா? ஸர்வதேசங்களிலும் தேவாலயங்கள் அத்தகையார்க்கு ஸங்கேத ஸ்தலமாக உதவுவதுண்டு; இதரார்க்கு வ்ருத்திகளைக் கல்பிப்பதுமுண்டு.

பல பண்டிதர்கள் தமது பாண்டித்யத்தைப் பார்க்கு உதவிப் பணம் சேகரிக்கின்றார்கள். பாகவதர்களோ பண்டிதர்களி

லும் அத்ருஷ்டசாலிகள். பாகவதர்களைக் கேட்பவர்களோ அவருடைய ப்ரவசந சக்தியையும், ஸங்கீத ஸாமக்ரிகளுடைய ஒற்றுமையையும் புகழ்ந்துகொண்டே காலக்ஷேபம் ஸுகமாக நடந்ததென த்ருப்தியடைகின்றார்கள்.

காலக்ஷேபம் அர்த்தார்ஜந ஸௌகர்யத்தைக் காட்டுகின்றபடியால், கேட்பவர்களுக்கு வேண்டிய ஸாமக்ரிகள், ஸங்கீதம், வேடிக்கைக் கதைகள், சிரிப்பை மூட்டும் வ்யாஜங்கள், சில ஸம்ஸ்க்ருத ச்லோகங்கள், என்னும் இதைக் கண்டுகொண்ட பலர், ஹரிகதை செய்வதையே வ்ருத்தியாகக் கொள்கின்றனர். இந்த அதிகாரிகளில் சிலர் ப்ரதமபரீக்ஷையை நாடகசாலைகளில் கொடுத்துவிட்டுப் பின்பாட்டு வகுப்புக்கு உயர்த்தப்பட்டு, முடிவில் பாகவத பரிணாமத்தையும் பொருந்துகின்றார்கள். ஆதலால் பண்டிதர்களும் பாகவத வ்ருத்தியைப் பகுமானிக்கின்றார்கள்.

"நாஹம் வேதைர் ந தபஸா ந தாநேந ந சேஜ்யயா ।
சக்ய ஏவம்விதோ த்ரஷ்டும் த்ருஷ்டவாநஸி மாம் யதா" ॥

"பக்த்யா த்வநந்யயா சக்ய அஹமேவம்விதோऽர்ஜுந ।
ஜ்ஞாதும் த்ரஷ்டும் ச தத்த்வேந ப்ரவேஷ்டும் ச பரந்தப" ॥

என்கிறபடியே பகவத் ஜ்ஞானம், பகவத் ஸாக்ஷாத்காரம், பகவத்ப்ராப்தி இம்மூன்றுக்கும் முக்யமான உபாயம் அநந்யபக்தி எனப்பட்டது. ஸங்கீதமும், சிரிப்பும், அந்த பக்திக்கு மார்க்கங்களன்று. உத்ஸவமும், உத்ஸாஹமும், அந்தபக்தியை அளிக்கமாட்டா. 'விஷயேஷு ச ஸர்வேஷு நாஸ்தி மே பரிதோஷணம் । ந ச ஸம்ஸாரிகே தாபே ஸக்திர் மம மநோ யத:' என்கிறபடியே, ஸம்ஸாரத்தில் ராக்ஷஸ துல்யங்களாய், துக்கப்ரதங்களாயும் பயப்ரதங்களாயுமிருக்கின்ற விஷயங்களை நோக்காமலும் சிந்திக்காமலும், புஷ்ப பலாதிகளைப்போல் அஸ்திரங்களாயும், அல்பஸந்தோஷ ப்ரதங்களாயுமிருக்கும் வஸ்துக்களை நிராகரித்தும், ஹ்ருதய நிகேதநனை அந்த ஹ்ருதயம் க்ஷணத்தும் மறவாதபடியே, அவனிடம் பக்திபண்ணுகிறவர்களுக்கு உத்ஸவத்தின் விபவங்கள் கண்படா; ஸங்கீதங்கள் செவிபுகா; வேடிக்கைகள் மனம்படா; அவனது நினைவே நினைவாகக் காலக்ஷேபம் நடக்கும்; அவனது திவ்யமங்கள விக்ரஹமே உத்ஸவங்களில்

அவர் புத்தியைக்கொள்ளும். அவர்களுக்கன்றோ புத்தியானது அநுபவ பர்யந்தமாகத் தத்வத்தில் ப்ரதிஷ்டிதமாக நிற்கும். மதத்தையே ஜீவனோபாயமாகச் செய்பவர்களுக்கு இந்த விதமான புத்தியின் பரிபாகம் ஸம்பவிக்குமோ?

பகவானிடம் நிலைத்த பக்தியைப் பலர் வேண்டினபோதிலும், அது யாரேனும் ஒருவர்க்கே கைகூடும். அச்யுதனுடைய திருவடியினிடம் வ்யாமோஹத்தால் இதர பதார்த்தங்களை த்ருணமாக நினைத்த மஹிமை பலர்க்கு உண்டாயிருந்தால், அதைக் குறித்து ராமாநுஜனைத் தனிமையில் எடுத்துச் சொல்வானேன்? இதர ப்ரயோஜநங்களை த்ருணீகாரம் செய்து, பிதுர்தநமற்றும், ஸ்வயம் பொருளை அபேக்ஷிக்காமலும், 'ஸுஹ்ருதி³ ஹ்ருதி³ஸௌமித்ரே வஸ்து ஸௌஹார்த³ஸம்ஸ்ரயம்' என்று சொல்லக்கூடிய அதிகாரிகள் மிகவும் சிலர். ஆதலால் பகவத்ப்ராப்திக்கு உரிய அநந்யபக்தியுள்ளவன் மஹாத்மா; மிகவும் துர்லபன். ஆனால் முமுக்ஷுத்வம் அதிக ஜநங்களுக்கு நேரிடலாம். மோக்ஷம் அவர்க்குள் சிலர்க்கே ப்ராப்தமாகலாம்.

தமக்கோ, பிறர்க்கோ, ஐஹிக ஸுகங்களையும் துக்கநிவ்ருத்தியையும் அபேக்ஷித்துப் பாடுபடுகின்றவர்களில் சிலர், முமுக்ஷுத்வத்தைப் பரிஹஸிப்பதுண்டு. பரலோக மொன்றுண்டு என்பதை நிராகரித்துக்கொண்டு, இதையே பரலோகமாகப்பண்ணுகின்றோமென்று அவர்கள் உத்கோஷிக்கின்றனர். அவர்கள் அறிந்த ப்ராக்ருத சாஸ்த்ரங்களும், லோகாநுபவங்களும், லோகத்தில் உத்பத்தி, வ்ருத்தி, க்ஷயம், மரணம் முதலான பாவவிகாரங்கட்கு உட்படாத பதார்த்தங்கள் முற்றிலும் இல்லை என்பதை ஸ்பஷ்டமாகக் காட்டுகின்றன. உத்பந்நமான வஸ்து நியமேந நாசத்தில் முடிவுபெறுகின்றது. 'மரணாந்தம் ஹி ஜீவிதம்' என்றும், 'நரஸ்ய ஜாதஸ்ய நாந்யத்ர மரணாத்³ப⁴யம்' என்றும் ராமாயண வசநங்கள் பொய்யாகமாட்டா. இருப்பவன் இருப்பவர்க்காக வ்யாபாரவானாக இருந்து இறப்பதையே புருஷார்த்தமாக எண்ணலாம். மரணாந்தரம் சேதநனுக்கு அநுகூலத்தை நம்பினவன் அவ்வண்ணம் எண்ணுவானாகில அவனை புத்திமானாகக் கொள்ளல்கூடாது.

ா 'உத்யோகிநம் புருஷஸிம்ஹமுபைதி லக்ஷ்மீ: தைவேந தேயமிதி காபுருஷா வதந்தி । தைவம் நிஹத்ய குரு பௌருஷமாத்மஶக்த்யா' எனும் உண்மையைத் தத்காலம் பகு ஜநங்கள் அங்கீகரிப்பார்கள். ஐஹிக புருஷார்த்தங்கள் ப்ரயத்ந ஶீலர்க்கே ஸித்திக்கின்றன. ப்ரயத்நமின்றி அபேக்ஷிதங்களை அடைவதென்பது அபவாதவிஷயம். லோகரீதி அந்யதாவாகத் தெரிகின்றது. யத்நம் செய்கின்றவர்க்கும் இச்சித்த பலன் கிட்டாமல் போகலாம். ஆதலால் 'யத்நே க்ருதே யதி ந ஸித்யதி கோऽத்ர தோஷ:' என்று மேலெடுத்த ஶ்லோகம் முடிகின்றது. பலிக்காமற்போன ப்ரயத்நமும் புருஷனுக்குச் சில குணங்களை உண்டாக்கும். ப்ரயத்ந பலம் கூடாமற்போவது ப்ரபல ப்ரதிபந்தகத்தாலென்று பெரியோர் சொல்வார்கள். ப்ரதிபந்தகம் த்ருஷ்ட ரூபமாகவும் அத்ருஷ்ட ரூபமாகவும் இருக்கும். ஆதலால் ஐஹிகத்தில் மநுஷ்யர் உத்யோகவான்களா யிருக்கவேண்டு மென்பது ந்யாய்யம். அந்த உத்யோகம் பாரஹிதத்தில் பர்யவஸிக்கலாம். அந்தக் காரண மொன்றினாலேயே ஆமுஷ்மிகம் ரக்ஷிக்கப்பட்டதாமோ? நெற்பயிர் செய்து கோதுமை அறுப்பதுண்டோ? வ்யவஹாரகாண்டம் படித்துவிட்டு வைத்யம் செய்யப் போகலாமோ? ஆமுஷ்மிகத்தை ஸாதிக்கவேண்டியவர் அதற்கேற்ற ப்ரயத்நங்களை மேற்கொள்ள வேண்டும். அந்யதா ப்ரமிக்கின்றவர் தாம் கெடுவதன்றிப் பிறரையும் கெடுக்கின்றார்கள்.

விஷய ஸுகம் ப்ராயேண ஆமுஷ்மிகத்தை நிரோதிக்கின்றது. ஸ்வர்க்காதி போகங்கள் உள்பட அந்த ஸுகத்தை ஶ்ரேயஸ்ஸாக நினைத்து ஸந்தோஷிக்கின்ற மூடர்கள் ஜரை மரணம் முதலான துக்க மிஶ்ரமான ஸம்ஸாரத்தைத் திரும்பத் திரும்ப ப்ரவேசிக்கின்றார்கள் என்று ஶ்ருதி வெளியிட்டது. பரமபுருஷார்த்தத்தை அபேக்ஷித்தவன் அதற்கேற்ற ப்ரயத்நங்களை மேற்கொள்ளக்கடவன். அவற்றை அவன் ஶாஸ்த்ரம் ஒன்றினாலாயே அறிந்து கொள்ளவேண்டியவன்.

நம்முடைய பாஶ்சாத்ய வித்யாஶாலைகளில் கணித ஶாஸ்த்ரங்களைப் பலர் விசேஷமாகக் கற்றுப் பரீக்ஷை கொடுக்கின்றார்கள். அவர்களுக்குள் ப்ராயேண யாவரும் ஜீவநத்தின் பொருட்டு ஒரு

உத்யோக விசேஷத்தில் ப்ரவேசிக்கும் காலத்தில், கற்ற வித்யையை முற்றிலும் மறந்து போகின்றார்கள். இது யாவரும் அறிந்த உண்மையே. ஆயினும் கற்றது வீண்போகாது; கற்றவன் மநஸ்ஸுக்கு அவ்வித்யை ஒருவிதமான ஸம்ஸ்காரத்தை அளிக்கின்றதென்று படித்தவர் சொல்வார்கள். லோக வ்யாபாரங்களுக்கு அந்த ரூபமான ஸம்ஸ்காரம் மிகவும் பயன்படுமென்றும் சொல்வார்கள். பரம புருஷார்த்தத்தை விரும்புமவர்க்கும் ஒரு விசேஷ சித்த ஸம்ஸ்காரம் அபேக்ஷிக்கப்படுகின்றது. அத்தகைய அதிகாரியொருவன் ஸ்வாச்ரம கர்மங்கள் யாவையும் பகவதாராதநரூபமாக அநுஷ்டித்து ஸ்வாதிகாரத்துக்குப் பொருந்திய சித்த பரிபாகத்தை ஸம்பாதிக்க வேண்டுமென்பது நம்முடைய வைதிக ஸம்ப்ரதாயஸ்தர்கள் நிச்சயம்.

ஆனால், பரோபகாரமற்ற க்ரியாவிசேஷங்களைக் காட்டிலும் பரோபகார ரூபமான ப்ரயத்நங்கள் பகவானுக்கு ப்ரீணநங்களாக மாட்டாவோ? என்று கேட்பவர்கள் உண்டு. வைதிக க்ரியைகளில் ஒவ்வொன்றும் பரோபகாரமற்றவை யென்பார் இத்தகைய பூர்வபக்ஷிகள். அது நிஜமன்று. த்ருஷ்டத்தில் அவை பரோபகாரங்களாகத் தெரியவில்லை யென்பதாலேயே அவை லோகோபகாரத்தில் பர்யவஸிக்க வில்லையெனக்கூடுமா? சாஸ்த்ர விச்வாஸமுள்ளவர்க்கு மநுஷ்யலோகத்துடன் லோகங்கள் முடிந்து போகவில்லை. ஆஸ்திகர்கள், 'ஸ்வயம்போகஃ நாஸ்திவரஃ', என்று சொல்லமாட்டார்கள். ஆதலால், வைதிக கர்மங்கள் ப்ரயோஜநமற்றவை எனக்கூடாது. மேலும், பகவத் ப்ரீணநமாகச் செய்யப்பட்ட க்ரியைகள், லோகோபகாரமற்றவை என்றொரு காரணத்தைக்கொண்டு த்யாகார்ஹங்களாகமாட்டா. கேவல கர்மமெனப் பார்க்குத் தெரிவது அநுஷ்டாதாவுக்கு ஜ்ஞாந விசேஷங்களுடன் கூடி நிற்கும்; பகவத் பக்தியையும் ப்ரகாசிப்பிக்கும். வைதிக கர்மங்களை ஒரு புருஷன் கேவல கர்ம ரூபமாயோ, ஜ்ஞாந ஸஹிதமாயோ, பக்தி ரூபமாயோ, அல்லது அவற்றின் யாவத ரூபங்களையும் அறிந்துகொண்டோ அநுஷ்டிக்கத் தகும். எந்த ரூபமாக அநுஷ்டிக்கப்பட்டபோதிலும் அந்த க்ரியைகளுக்கு உத்தேச்யன் பரம புருஷனே. முமுக்ஷுவானவன் இவ்வண்ணம் விஹித கர்மங்களைச் செய்யக்கடவன். ஆநுஷங்கிகமாக அவற்றின் ப்ரயோஜநம் ஜீவ லோகத்துக்கும் ப்ராப்தமாகலாம்.

'யத்ராஷ்டாக்ஷரஸம்ஸித்தோ மஹாபாகோ மஹீயதே । ந தத்ர ஸஞ்சரிஷ்யந்தி வ்யாதிதுர்ப்பிக்ஷதஸ்கரா: ॥' என்கிறபடியே, திருமந்த்ர ஜ்ஞாநமும், அதில் நிஷ்டையுமுடையவன் ஆதரிக்கப் படும் தேசத்தில் ஒருவித கேடும் ஸம்பவிக்கமாட்டாது. 'நிமிஷார்த்தமபி யத்ர யத்ர வஸேந்நர: । தத்ர தத்ர குருக்ஷேத்ரம் நைமிசம் புஷ்கரம் ததா ॥' என்கிறபடியே, பகவத் பக்தன் வஸிக்கும் ஸ்தலங்கள் அவன் வாஸமாத்ரத்தாலே புண்ய க்ஷேத்ரங்களாகின்றன. பகவத் ப்ரஸாதம் பாகவதாராதநமடியாக உண்டாகுமென்பது ஆஸ்திகர்கள் அறிந்த விஷயம். அவர்களில்லாவிட்டால், மோக்ஷ மார்க்கமென்பது லோகத்தார்க்குப் புலப்படமாட்டாது. பகவத் பரர்களுடைய தூஷணை நாஸ்திகர்கள் முறைகளில் சேர்ந்தது. 'தொல்லுலகில் நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட் டெல்லார்க்கும் பெய்யும் மழை' என்று ஔவை சொன்னாள். ஸத்துக்கள் வஸிக்காத ப்ரதேசம் ஆஸ்திகர்க்கு வாஸ யோக்யமன்று. ஸதா விஷய ப்ரவணர்களாய்த் தத் ப்ராப்தியில் விரோதிகளாகத் தாம் ப்ரமித்தவர்கள் ஸாதுக்களேனும் அவரிடம் மித்யாபவாதங்களை ஏறிட்டுக்கொண்டு அவர்களுக்கு ஹிம்ஸையைச் செய்பவர்களாய்த் தாம் செய்ததே போதாதென்று எண்ணி, தம்மிலும் அஜ்ஞராவார்களை வஞ்சித்து அவர்களைக்கொண்டும் நிர்துஷ்டர்களான ஸத்துக்களுக்குத் துன்பம் விளைவிப்பவர்களுக்குப் பகவானேது? பாகவதராவார் யார்? 'ஸூத்ராவஸ்யம் ஹரேஸ்ஸாம்யம்' எனும் உண்மை அறியாதவர்களுடைய க்ரியைகள் அங்யபரங்களாகவே நிற்கும்.

இந்த யோசனைகளால், ஜந்மஸித்த தர்மங்களை ஆசரிப்பவர்க்கும் த்யஜிப்பவர்க்கும் லோகோபகார ப்ரயத்நங்கள் வ்ருதாவென்று சொல்கின்றோமில்லை. பரோபகாரம் மஹாபுண்யம். பரோபகாரங்களில் ஸாமாந்ய வித்யாப்ரதாநம் உத்தமம்; ப்ரஹ்ம வித்யாப்ரதாநம் ஸர்வோத்தமம். வித்யாப்ரதாநாதிகளால் ஸத்துக்கள் ஸதா பரஹிதம் செய்பவர்கள் எனப்படுவார்கள். ஸதாசாரத்திலும், ஸத்கர்மங்களிலும் நிலைத்தவர்கள் தமது மார்க்கங்களைப போதிக்காமலே பிறர்க்கு உதவுகின்றார்கள்; ஆதலாலன்றோ, 'ஸ்வயஞ்ச தீர்ணா: காமமதமோக்ஷார்ணவம் தத:

தே' என்று சொல்லப்பட்டது. பத்ரிகைகளிலும், கூட்டங்களிலும் முழங்காவிட்டாலும், ஸ்வதர்மங்களில் நிலைகொண்ட பாகவதன், தனது இருப்பாலேயே லோகோபகாரம் செய்கின்றான் என்பது ஸத்யம். ராக்ஷஸ துல்யர்களுக்கோ, ஸாதுக்கள் ஸ்வஸத்தை பொன்றினாலேயே அபராதிகளாகின்றார் கள். ஆதலால் அப்படிப்பட்ட உத்தம புருஷர்களைப் பழிப்பார் உளரென்று இவ்வளவு எழுதினோம்.

ஆனால், லோக ஜநங்கள் மிகவும் ஆத்யாத்மிகாதி துக்கங்களினின்று வருந்துகின்றார்கள். அந்த துக்கங்களின் ஶமநத்தில் ப்ரவ்ருத்தி இக்காலம் மிகவும் வேண்டப்படுகின்றது. அவ்வண்ணம் ப்ரவ்ருத்தராவார்கள் பரோபகாரிகளே; தர்மிஷ்டர்களே; இப்படிப்பட்ட தர்மம் யாவராலும் தம் தம் சக்திக்கு அநுகுணமாக செய்யத்தக்கது. நாஸ்திகனும் தர்மம் செய்யலாம். அவனுக்குப் புண்ய க்ருத்துக்களுடைய லோகம் உண்டாகும். ஒருவன் தனது ஆத்மாவின் ஸத்பாவத்தையும், ஈஶ்வரனுடைய அஸ்தித்வத்தையும் ஒப்புக்கொண்டு லோகோபகாரார்த்தம் தர்மக்ரியைகளில் அந்வயிக்கலாம். அவனுக்கும் புண்ய க்ருத்துக்களுடைய லோகம் ப்ராப்தமாகும். அந்த லோகமும், 'க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விஶந்தி' என்கிறபடியே, புண்ய பலம் போகத்தினால் க்ஷயித்தவுடன் இல்லாமற் போய்விடும். புண்ய கர்மங்கள் மோக்ஷ ஸாதநங்களாகமாட்டா. பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு நன்னடத்தைக்காகப் பஹுமாநம் தருவதையொத்துப் பரோபகார ரூபமான வ்யாபாரங்களில் அந்வயிப்பவர்களுக்குப் பஹுமாநமாக மோக்ஷம் ஈஶ்வரனால் கொடுக்கப்படுமென்பது அஜ்ஞர்கள் வார்த்தை. 'நாஸ்த்யக்ருத: க்ருதேந' என்று ஶ்ருதி மொழிந்தது. மோக்ஷம் என்றொரு பதார்த்தம் முன் இல்லாமல் இருந்து, ஒரு கர்மத்தால் உண்டாக்கப்படுவதன்று. அது என்றும் ஒவ்வொரு புருஷன் ஸ்வரூபத்திலும் உள்ளது. அஜ்ஞாநத்தால் மறைக்கப்பட்டிருக்கிறது. மோக்ஷம் என்றால் தமிழில் வீடு என்பர்; அதாவது அஜ்ஞாநத்தினின்று விடுபடுவது;

ஸம்ஸாரத்தினின்று விடுபடுவது; ஸம்ஸாரமென்பது அஜ்ஞாநத்தில் நிலைத்திருக்கின்றது. அதற்கு மூலம் அஜ்ஞாநம்; அதன் அநுவ்ருத்திக்குக் காரணம் அஜ்ஞாநம். ஆதலால், 'அவித்யா நிவ்ருத்திரேவ மோக்ஷ:' என்று பெரியோர் சொன்னார். அந்த அவித்யையும் அநாதி யென்பார்கள். அந்த அவித்யை சரீரத்தைத் தானென ப்ரமிப்பதாலும் சரீர ஸம்பந்திகளைத் தனதென்று எண்ணுகையாலும் வளர்கின்றது. தான் சரீரமன்று; சரீர ஸம்பந்திகளுக்கும் தனக்கும் ஸம்பந்தமில்லை; தான் ஆத்மா; ஜ்ஞாநாநந்தமயன்; பரமாத்மாவினுடைய நிருபாதிகதாஸன்; என்கிற ஜ்ஞாநத்தால் அந்த அவித்யை நிவ்ருத்தமாகும். அந்த ஜ்ஞாநம் ஆத்ம ப்ரயத்நத்தின் பலமாக அநுபவபர்யந்தமாக நிலைக்கவேண்டும். இது பக்தியோகம்; ப்ரபத்தி முதலான ஸாதநங்களால், ப்ரஸந்நனான புருஷோத்தமன் க்ருபையால் உண்டாகவேண்டியது. அவற்றின் பலம் பகவத் ப்ராப்தி; அது, 'தஸ்ய தாவதேவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யே' என்கிறபடியே, சரீராவஸாநத்தில் கிடைக்கும்.

ஆதலால் காரண கார்யங்களின் ஸம்பந்த விவேகமற்றவர் சொல்வதுபோல், புண்ய க்ருத்யங்கள் மோக்ஷ ஸாதநமென்று பெரியோர் சொல்லமாட்டார்கள். ஆஸ்திகனா யிருப்பவன் பரோபகாரத்தைப் பகவத் ப்ரீணநமாகச் செய்வன். அதில் தனது ஸம்பந்த ஜ்ஞாநத்தை முற்றிலும் விலக்கிக்கொண்டு, தனது ஸ்வரூபமாகின்ற பகவத் ஶேஷத்வத்தை ஸ்மரித்துக்கொண்டு, அதைத் தன்னுடைய ஶேஷ வ்ருத்தியென்று நினைத்துச் செய்வன். தன்னுடைய ஸர்வ கர்மங்களுக்கும் உத்தேஶ்யன் பரம புருஷனென்பது ஶாஸ்த்ர ஜ்ஞாநம் விநா ஒருவர்க்கும் தெரியமாட்டாது. முமுக்ஷுவான அர்ஜுநனை நோக்கிப் பகவான் 'நீ எதைச் செய்தாலும், புஜித்தாலும், கொடுத்தாலும், அதை எனக்கு அர்ப்பணம் செய்' என்று கட்டளையிட்டான். இதுவும் ஶாஸ்த்ர விரோத மில்லாத விஷயத்திலென்று பெரியோர் கொள்கை. ஒருவன் அக்ருத்யங்களைச் செய்து பகவதர்ப்பணம் செய்யலாமென்றபடி யன்று. பரோபகாரங்களை ஶ்லாகித்துக் கொண்டு குலதர்மங்களைத் தூஷிக்கின்றவர்களை உத்தேசித்துப்

பரோபகாரங்களுக்கும் பரம புருஷனே உத்தேச்யனாகாவிட்டால் முமுக்ஷுக்களுக்கு அவையும் பந்தகங்களாமென்று சொல்கின்றோம். பகவான் ஸர்வ கர்மங்களாலும் ஆராதிக்கத் தக்கவன் என்பதை முமுக்ஷு தெரிந்துகொள்ள வேண்டியது. ஸம்ஸாரத்தின்கண் இருப்பவர்க்கு ப்ரமையால் ஸுகமெனத் தோன்றுகின்ற ஸுகாபாஸங்களில் புத்தியைச் செலுத்தாமல், ஸர்வத்ர ஸமனாக நிலைத்திருக்கின்ற பரம புருஷனைத் தர்சிக்க முயல்வதைப் பற்றி ப்ரஹ்லாதன் தைத்ய குமாரர்களுக்கு உபதேசித்தான். ஸமதர்சநமே அச்யுதனுடைய ஆராதந மென்றும் சொன்னான். அந்த ஸமத்வ புத்தியினால் பரோபகாரத்தைப் பகவத் ப்ரீணநமாகத் தத்வமறிந்தவர்கள் செய்வார்கள். பரமைகாந்திகள் த்ருஷ்டத்தில் பரோபகாரமாகக் காணப்படாத பாகவத தர்மங்களை அநுஷ்டிப்பார்கள். தத்வமறியாதவர்கள் அவர்களைத் தூஷிக்கப் புகுந்து அஸஹ்யமான பாகவதாபசாரத்தை ஸம்பாதித்துக்கொள்கின்றனர். ஸ்வார்த்தமோ பரார்த்தமோ த்ருஷ்ட ப்ரயோஜநங்களையே நம்புகின்றவர்கள் இக்காலத்தில் பெருகுகின்றார்கள். அப்படிப்பட்ட ப்ரயோஜநங்களிலேயே மிகவும் ப்ரயத்நபரர்களான ஐரோப்பகண்ட வாஸிகள் அப்ரயத்நங்களின் முடிவை ப்ரக்ருத யுத்தத்தில் காண்கிறார்கள். அஸஹ்யமான துன்பங்களை நிரபராதிகளிடம் செய்துகொண்டு, ஸர்வேச்வரனை நிராகரித்துக்கொண்டு, அதர்ம யுத்த ப்ரவ்ருத்தர்களான ஜர்மானியர்க்கு நல்வழி யுண்டோ? தர்ம யுத்தத்தை அவலம்பித்தவர்களும், யுத்த மூலங்களை விசாரிக்கப்புக்கால், போகேச்சையும், போக ஸாமக்ரிகளுடைய ஸம்பாதந முயற்சியும் தான் மநுஷ்யர்க்குள் வைரஹேது வென்பதைக் கண்டுகொள்ளலாம். பகவானைக் குறித்து யாவரும் பரதந்த்ரர் என்பதைக் கண்டுகொண்டு, ஸமத்வ ஸாக்ஷாத்காரம் பகவத் ப்ரீணநமென்று அறிந்தவர்கள் மிகுந்தால்தான் லோகத்துக்கு க்ஷேமம் உண்டாகும். ராஜாங்கத்தார்கள் ந்யாயமான மார்க்கத்தில் ஆண்டு, ப்ரஜைகளுக்கு க்ஷேமத்தை உண்டுபண்ணிக்கொண்டு, ஸமஸ்தலோகமும் ஸுகமடையவேண்டும் என்று தீர்மானித்தால்தான் ஜநங்களுக்குள் பரஸ்பரவைரம் விலகும்.

நாம் மேலே சொன்ன ஸமத்வ புத்தியானது ஆத்மவிஷயம்; சரீரவிஷயமன்று. சரீரங்கள், ஜந்மங்களாலும் சரீரிகளுடைய பூர்வ வாஸனைகளாலும் ஸம்ஸர்க்காதிகளாலும் குண விபாகங்க

ளுடன் கூடியன. ராஜஸ தாமஸ குணங்களையடக்கி ஸத்வகுணம் தலையெடுக்கும்படி முமுக்ஷுவானவன் ஸதா ஜாகரூகனுயிருக்க வேண்டும். பூததயை குறைவுபடாமலும், பரஹிதத்தைச் செய்து கொண்டும், முமுக்ஷுவானவன் தனது ஸ்வரூப குணங்களை அவற்றிற்கு அநுகுணமான ஸஹவாஸங்களாலும் கர்மங்களாலும் ரக்ஷிக்க வேண்டியவன். ஸம்ஸர்க்கங்களால் குணதோஷங்கள் ஏற்படுமென்பது யாவரு மறிந்த விஷயம். விசார ஸாமர்த்ய மற்றவர்கள் ஸத்வகுணத்தின் உந்மேஷத்தாலும் ஆத்மகுண பூர்த்தியாலும் விசேஷித்த ஜநங்களுக்கும், க்ஷுத்ரப்ரவ்ருத்திகளில் ரமிப்பவர்களுக்கும்,சரீர ஸமத்வத்தை வேண்டுகின்றுர்கள். அந்த ஸமத்வம் பெரியோரெல்லாம் சிறியோருடன் ஒன்றுபட்டால் தான் உண்டாகும். சிறியோரெல்லாம் பெரியோராவதென்பது உலகவழக்கில் நேரிடமாட்டாது. செல்வப்பெருக்காலும், சேர்க்கையின் பலத்தாலும், அதிகாரச் செருக்கினுலும், ஆயுதவலிமையாலும், அவற்றிற்கேற்ற ஸாமாந்ய வித்யாபரிசயத்தாலும், ஏற்படும் பெருமை உலகத்தில் என்றும் நிலைக்கும். அவற்றின் அபாவத்தால் உண்டாகும் சிறுமையும் நீடித்துநிற்கும். இந்தச் சிறுமையையே பெருமையாக்கி நின்ற ஆத்மகுண பூர்ணரான நம்முன்னோர்களுடைய மேன்மையை யோசிக்காமல் பறிகொடுக்கும் ஜநங்கள் இப்போது வ்ருத்தியடைகின்றுர்கள். ஆதலால் வைதிகதர்மாபிமாநிகள் மிகவும் யோசிக்கதக்க விஷயங்களை ஈஷத் சிந்தித்தோம்.

---

ஸ்ரீ:.

## வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு - ரங்கநாதாசார்யருடைய தமிழ் வ்யாக்யாநத்துடன்) ... ... | 0 | 2 | 0 |
| 2. | ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் ஶிஷ்யர்களின் கர்த்தவ்யங்களும்:—(ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யரால் செய்யபட்ட உபந்யாஸம்) ... ... ... ... ... | 0 | 2 | 0 |
| 3. | ஸ்ரீ பாகவத தசிஸ்லோகீ - (ஸ்ரீ. சேட்லூர் நரஸிம்ஹாசார்யர்) ... ... ... ... ... ... | 0 | 4 | 0 |
| 4. | ஸ்ரீ சதுஶ்லோகீ விவரணம் ... ... ... ... | 0 | 4 | 0 |
| 5. | ஸ்ரீராமாயணத்தில் விசேஷார்த்தங்கள் (ஸ்ரீ. உப. எஸ். கோபாலஸ்வாமி ஐயங்காரால் எழுதப்பட்டுள்ளது ... ... ... ... ... ... | 0 | 4 | 0 |
| 7. | ஆர்யாப்யுதயம். (ஸ்ரீ. உப. டி. இ. சடகோபாசாரியார் ... ... ... | 0 | 2 | 0 |
| 8. | ஸ்ரீ ஹம்ஸ ஸந்தேஶ விமர்ஶம் (ஸ்ரீ. உப. எம். கே. தாதாசாரியார்) ... ... ... | 0 | 3 | 0 |

ஸ்ரீ:
श्रीयै नमः.

# வேதாந்த ஸங்க்ரஹம்.

(தொடர்ச்சி.)

ஸர்வத்ராதிகரணம்.

முதல் அத்யாயம் இரண்டாவது பாதத்தில், முதலில் சாந்தோக்யத்தில், 'सर्वं खल्विदं ब्रह्म तज्जलानिति शान्त उपासीत' என்று ஆரம்பிக்கிற வாக்யத்தின் அர்த்தம் விவரிக்கப்படுகிறது. இந்த ஸர்வ ஜகத்துக்கும் ஸ்ருஷ்டி ஸ்திதி நாஶத்துக்குக் காரணம் பகவானுதலால், இந்த ஜகத்தெல்லாம் ப்ரஹ்மம் தான்; அந்த பகவானை ஶாந்தனுப்கொண்டு உபாஸனைசெய்ய வேண்டும்; ஒருவன் உபாஸிக்கிறபடியே பலமும் இருக்கும். அந்த பகவான், 'मनोमयः प्राणशरीरो भारूपः सत्यसङ्कल्प आकाशात्मा सर्वकर्मा सर्वकामः सर्वगन्धः सर्वरसः................ एष म आत्मान्तर्हृदये' — அவனை மநஸா ஶுத்தேந மஹா பரிசுத்தமான மநஸ்ஸால் அறியலாம்; அவன் தேஜோமயன்; அவன் எண்ணத்தை ஸத்யமாய் நிஶ்சயமாய் நிறைவேற்றுபவன்; இஷ்டப்படக்கூடிய எல்லா வஸ்துக்களையும் உடையவன்; ஆநந்தமே ஸ்வரூபமாயுடையவன்; மிகவும் நுட்பமாய் அணுவுக்குள் அணுவாக இருப்பவன்; உபாஸகன் ஹ்ருதய கமலத்தில், அவனை அநுக்ரஹிக்கும்பொருட்டு க்ருபைகூர்ந்து எழுந்தருளியிருப்பவன். இப்படிப்பட்ட அந்தர்யாமியான பகவானை மஹாபக்தி ஶ்ரத்தையுடன் உபாஸிக்கிறவன் அவனை அடைவான்; இது நிஶ்சயம்; என்று ஶாண்டில்யர் உபதேசிக்கிறார்.

மேற்சொன்ன குணஸ்வரூபமுடையவனே நமக்கு ப்ராப்யம்; அடையும் வஸ்து; 'यतो वा इमानि भूतानि जायन्ते येन जातानि जीवन्ति यत्प्रयन्त्यभिसंविशन्ति तद्विजिज्ञासस्व तद्ब्रह्म' என்று முதல் பாதத்தில் ஜந்மாதிகரணத்தில் ஸ்ரு

ஷ்டி ஸ்திதி நாஶம் மோக்ஷம் இவைகள் எல்லாவற்றுக்கும் காரணமாகச் சொல்லப்பட்டவன் பகவான் தான் என்று வேதஸ்ருதிகள் முன்னமே ப்ரஸித்தமாய் முறையிடுகின்றன. 'ஸர்வஸ்ய வஶீ ஸர்வஸ்யேஶாந:' என்று ப்ருஹதாரண்யத்திலும் சொல்லியிருக்கிறதையே சாந்தோக்யம் வெளியிடுகிறது.

பகவத்கீதையிலும், 'ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ மத்த: ஸ்ம்ருதிர் ஜ்ஞாநமபோஹநஞ்ச' என்றும், 'ஈஶ்வரஸ்ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேஶேऽர்ஜுந திஷ்டதி । ப்ராமயந் ஸர்வபூதாநி யந்த்ராரூடாநி மாயயா' (ப. கீ. 15-(15)-18-61) [ப்ராணிகளின் ஹ்ருதய கமலத்தில் எல்லாவற்றையும் நமது ஸங்கல்பத்தாலேயே நியமித்துக்கொண்டு, நாம் ஆத்மாவாயிருக்கிறோம்; நம்மிடத்திலிருந்துதான் ஜ்ஞாநம் முதலியன உண்டாகின்றன.] என்றும், ஸகல ப்ராணிகளையும் ஆள்வதே ஸ்வபாவமுன பகவான், ஹ்ருதயத்தில் எழுந்தருளியிருக்கிறான் என்னும் உபநிஷதர்த்தத்தைக் கண்ணன் வெளியிட்டிருக்கிறார். எங்கும் வ்யாபித்துக்கொண்டிருக்கிற பரமாத்மா, உபாஸகன் ஹ்ருதயத்தில் எழுந்தருளியிருக்கிறான். அவன் ஸூக்ஷ்மமான ரூபத்தையுடையவன் என்று வெளியிட்டிருக்கிறதின் தாத்பர்யம் என்னவென்றால்: அவன், மஹா ஜ்ஞாநிகளாகிற பக்தர்களுக்கு ஸேவை ஸாதிக்கும் பொருட்டு, தானே மஹா க்ருபையால் அவர்கள் த்யாநிக்கிற ப்ரகாரம் எழுந்தருளியிருக்கிறான். பகவான், ஒரு அத்புத தேஜோமயமான மாயா ஸம்பந்தமில்லாத அப்ராக்ருதமான ரூபத்தையுடையவனென்று ஸூர்யாந்த்ரயாமி விஷயமாய்ச் சொல்லும்போது சொல்லியிருக்கிறோம்.

இப்படி, பகவான் ஶரீரத்துக்குள் இருக்கிறான் என்பதால் ஒரு ஶரீர ஸம்பந்தம் அவனுக்கு ஏற்படுகிறது. அவனுக்கு தோஷ ஸம்பந்தமில்லை. முண்டகோபநிஷத்தில் 'தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்த்யநஶ்நந்நந்யோ அபிசாகஶீதி' என்று சொல்லுகிறபடியே ஜீவனுக்கு ஶரீரஸம்பந்தம் கர்மபலனுமுண்டாகின்றது; பகவானோ உபாஸகர்களை அநுக்ரஹிக்கும்பொருட்டு ஶரீரம் பரிக்ரஹிக்கிறான். இது இச்சையாலே தவிர கர்மத்தாலே அல்ல.

பகவான் ஸகல பதார்த்தங்களிலும் உள்ளும் வெளியும் வ்யாபித்துக்கொண்டிருக்கிறான் 'अन्तर्बहिश्च तत्सर्वं व्याप्य नारायणः स्थितः' என்பது புருஷஸூக்தம். பக்தர்களை அநுக்ரஹிக்கும்பொருட்டே ஹ்ருதயத்தில் ஒரு விக்ரஹத்துடன் எழுந்தருளியிருப்பதை விக்ரஹ வ்யாப்தியென்று பூர்வாசார்யர்கள் கூறுவர். 'गुहायाम्..................महोरस्कं पुराणम्' என்றும், 'येषामिन्दीवरश्यामो हृदये सुप्रतिष्ठितः' என்றும், ஹ்ருதயத்தில் ஸூக்ஷ்ம ஸ்வரூபத்துடன் அவன் எழுந்தருளுவதை 'அரவத்தமளியினோடும் அழகிய பாற்கடலோடும் அரவிந்தப்பாவையுந் தானுமகம்படி வந்துபுகுந்து', 'வெள்ளைச் சுரிசங்கொடு ஆழியேந்தித் தாமரைக்கண்ணன் என் நெஞ்சினூடே புள்ளைக் கடாகின்ற வாற்றைக் காணீர் என் சொல்லச் சொல்லுகேன்', 'नीलतोयदमध्यस्था विद्युल्लेखेव भास्वरा' என்பவற்றாலும், ஸ்வரூபத்துடன் வ்யாப்தி சொல்லப்பட்டிருக்கிறது. 'तस्यैष आत्मा विवृणुते तनूं स्वाम्' என்று 'ஜ்ஞானிக்குத் தன் விக்ரஹத்தையே அநுபவிக்கும்படி கொடுக்கிறான்' என்றும் நிர்வஹிப்பார்கள். 'யாவையும் யவரும் தானாய்..........................தோய்விலன்' என்று [ஶரீர ஸம்பந்தத்தால் தோஷம் தட்டாதவன்] ஆழ்வாரும் வெளியிடுகிறார்.

ஆனால் அவன் பலத்தை அநுபவிப்பதுபோல, கடவல்லியில் 'यस्य ब्रह्म च क्षत्रं च उभे भवत ओदनः । मृत्युर्यस्योपसेचनं क इत्था वेद यत्र सः' (I. 2. 5.) ஸர்வமும் அவனுக்கு ஆஹாரமாகவும், யமனையும் அதற்கு ஒரு ஊறுகாய் துவையல் போலவும் சொல்லியிருக்கிறதே என்றால், அதுவும்; பகவான் ஜகத்தெல்லாவற்றுக்கும் ஸம்ஹாரகர்த்தா வென்று வெளியிடுகிறதே தவிர வேறில்லை. கர்மத்தால் ஒரு பலனை புஜிப்பதைப் போல அல்ல. அவன், 'உலகமுண்ட பெருவாயன்' என்று வெளியிடப்படுகிறது.

அத்ரதிகரணம்.

மேலும், பகவானை, 'महान्तं विभुमात्मानं मत्वा धीरो न शोचति' [எங்கும் நிறைந்திருக்கிற பராமாத்மாவை

ஸாக்ஷாத்கரித்தால் ஸகல துக்கங்களும் போகின்றன] என்றும், ஜீவனை, 'ந ஜாயதே ம்ரியதே வா கதாசித்' என்று ஆத்மா நித்யன், பிறப்பு இறப்பு இல்லையென்றும் சொல்லி, 'அணோரணீயாந் மஹதோ மஹீயாந்' [ஸூக்ஷ்மத்துக்கெல்லாம் ஸூக்ஷ்மமானது; பெரியதெல்லாவற்றுக்கும் பெரியது] என்றும் பகவானைச் சொல்லி, 'நாயமாத்மா ப்ரவசநேந லப்ய: ந மேதயா ந பஹுநா ஶ்ருதேந யமேவைஷ வ்ருணுதே... தநூம்ஸ்வாம்' - [பகவான் கேவலம் ஶ்ரவணம் மநநம் த்யாநம் இவைகளால் அடையக்கூடியவனல்லன்; மஹாப்ரீதிரூபமான ஆராத காதலாகிற பக்தியால் தான் அவனை அடையலாம்] என்றும், 'யாதுப்ரஸாதாந் மஹிமாந மாத்மந:' - அவனுடைய க்ருபையால் தான் 'ஸோத்வந: பாரமாப்நோதி தத்விஷ்ணோ: பரமம் பதம்' என்று தர்ஶந ஸமாநாகாரமான பகவத்பக்தியால் மோக்ஷத்தை பக்தர்களான ஜ்ஞாநிகள் அடைகிறார்கள் என்றும் கடவல்லியில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த பக்திக்கு வேண்டிய அங்கம் முதலானவற்றைப் பிறகு விவரிப்போம்.

**அந்தர்யாம்யதிகரணம்.**

நம்முடைய விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்துக்கு முக்ய ப்ரமாணம் ப்ருஹதாரண்ய உபநிஷத்தில் III. 7-ல் இருக்கும் அந்தர்யாமிப்ரமாணம் என்பது. இந்த ஜகத்தெல்லாம் பரமாத்மாவுக்குச் சரீரம்; அவனே ஆத்மா; இதெல்லாம் அவனுக்கு ப்ரகாரம்; அவனன்றி ஜீவாத்மாக்களுக்காவது ப்ரக்ருதிக்காவது இருப்பே இல்லை. ஜீவாத்மாக்கள் பகவானைவிட வேறாயிருந்தாலும், அவைகள், அவனுக்குச் சரீரம் போன்றவை. 'உடன்மிசை யுயிரெனக்கரந் தெங்கும் பரந்துளன்' என்றாரிறே ஆழ்வாரும். இப்படி இருப்பதால், அவன் அதீநமில்லாத வஸ்து கிடையாது; அவனே அந்தர்யாமி; எல்லா ஶப்தங்களும் ந்யாயமாய் பகவானையே குறிக்கின்றன. ஶ்ருதிகளில் சில இடங்களில் அவனையும் ஜீவாத்மாக்களையும் ஸ்பஷ்டமாய் வேறாகச் சொல்லியிருக்கிறது. இவைகட்கு பேதஶ்ருதிகள் என்றும், ஜீவனும் பரமாத்மாவும் ஒன்று என்று சொல்லும் ஶ்ருதிகள் அபேதஶ்ருதிகள் என்றும்

சொல்லப்படும். முன்னே நாம் சொன்ன, '𑌸𑌰𑍍𑌵𑌂 𑌖𑌲𑍍𑌵𑌿𑌦𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮' என்பது ஒன்று. இந்த இரண்டுவகை ஶ்ருதிகளையும் விரோதமில்லாமல் நாம் அறிவதற்கு, இன்னவிதத்தில் பேதம் சொல்லலாம், இன்னவிதத்தில் ஐக்யம் சொல்லலா மென்பதை கடக ஶ்ருதி காட்டுகிறது.

இந்த அந்தர்யாமி ப்ரமாணமாகிற கடகஶ்ருதி, ஜீவாத்மாக்களையும் ப்ரக்ருதியையும் பரமாத்மாவுக்குச் சரீரமாய்ச் சொன்னால், ஆத்மா வேறு தேஹம் வேறு என்று பிரித்து அறியுமாப்போலே பேதமாகச் சொல்லலாம். தேஹத்துடன் கூடிய ஆத்மா ஒரே வஸ்து என்பதில் ஸந்தேஹமில்லை. இந்த அர்த்தத்தில் அபேதமாயும் சொல்லலாம். இப்படி பேதஶ்ருதிகளுக்கு ஒருங்குபடுத்தி அர்த்தம் சொன்னால் ஒன்றுக்கொன்று விரோதப்படாது. ப்ருஹதாரண்யத்தில் '𑌯𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌂 𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾 𑌅𑌨𑍍𑌤𑌰𑍋 𑌯𑌂 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌨 𑌵𑍇𑌦 𑌯𑌸𑍍𑌯 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌶𑌰𑍀𑌰𑌂 𑌯𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌮𑌨𑍍𑌤𑌰𑍋 𑌯𑌮𑌯𑌤𑌿 𑌏𑌷 𑌤 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑌮𑍃𑌤𑌃 - 𑌅𑌦𑍃𑌷𑍍𑌟𑍋 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 𑌅𑌶𑍍𑌰𑍁𑌤𑌃 𑌶𑍍𑌰𑍋𑌤𑌾 𑌅𑌮𑌤𑍋 𑌮𑌨𑍍𑌤𑌾 𑌅𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌃 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌾 𑌨𑌾𑌨𑍍𑌯𑍋𑌽𑌤𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 𑌶𑍍𑌰𑍋𑌤𑌾...... 𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑍍𑌯𑌮𑍃𑌤𑌃' [பூமியென்ன, வருணன் முதலான தேவதைகளென்ன, சந்த்ர ஸூர்யர்களென்ன, நக்ஷத்ரங்களென்ன, ஜீவாத்மாக்களென்ன இவை எல்லாவற்றினுள்ளும் அவன் இருந்து கொண்டு அந்தந்த வஸ்துக்களுக்குத் தெரியாமல், தான் எல்லாவற்றையும் தெரிந்து கொண்டும், நியமித்துக்கொண்டும், அம்ருதனாய், நித்யனாய், அவை ஒவ்வொன்றும் தனக்குச் சரீரமாய், தான் அந்தர்யாமியாய் நிர்வஹித்துக் கொண்டிருக்கிறான்] என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. சாந்தோக்யத்திலும் பரமாத்மாவை '𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌸𑌿' என்று ஐக்யப்படுத்திச் சொல்லுமிடத்தில் '𑌸𑌰𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾' என்று சொல்லியிருக்கிறது. தைத்திரீயத்தில் '𑌅𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑌃 𑌶𑌾𑌸𑍍𑌤𑌾 𑌜𑌨𑌾𑌨𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾........𑌤𑌤𑍍𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌤𑌦𑍇𑌵𑌾𑌨𑍁𑌪𑍍𑌰𑌾𑌵𑌿𑌶𑌤𑍍 𑌤𑌦𑌨𑍁𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌸𑌚𑍍𑌚 𑌤𑍍𑌯𑌚𑍍𑌚𑌾𑌭𑌵𑌤𑍍' - [தானே எல்லாவற்றையும் நிர்வஹித்து ஆண்டுகொண்டு, ஆதாரமாயிருந்து கொண்டு, ஸ்ருஷ்டி பதார்த்தங்களை உண்டாக்கி,

உட்பிரவேசித்து, நாமரூப முண்டாக்கி, எல்லாவற்றுக்கும் ஆத்மாவால், ஸகல விதமான வெவ்வேறான பொருள்களாய் ஆகிறான்] என்றும் சொல்லியிருக்கிறது. இப்படிப்பட்ட ஸ்வரூப ரூபகுண ஶக்தியுடையவன் பகவான் என்றாயிற்று.

அந்தராதிகரணம்.

மேற்சொன்ன அந்தர்யாமி ப்ராஹ்மணத்தில் ஒரு வாக்யத்தில், 'எவன் கண்ணுக்குள் இருந்துகொண்டு, கண்ணுக்குத் தெரியாமல், அந்த நேத்ரத்தை ஶரீரமாக வுடையவனோ, அவன் அந்தர்யாமி; ஆத்மா; அம்ருதன்' என்று சொல்கிறபடி, சாந்தோக்யத்தில், 'அக்ஷிணி புருஷோ த்ருஶ்யத ஏஷ ஆத்மா' [கண்ணுக்குள் இருப்பவன் பரமாத்மா; யோகிகளின் உட்கருத்தால் ஸாக்ஷாத்கரிக்கப்படுகின்றான்;] என்றும், 'ஸர்வாணி வாமாந்யபிஸம்யந்தி' என்று ஸகல ஆநந்தத்தை அடைவிப்பவனாகவும், 'கம் ப்ரஹ்ம கம் ப்ரஹ்ம' என்பதால் ஆகாஶத்தை ஶரீரமாகவுடைய பரப்ருஹ்மம் நிரதிஶய அளவிடக்கூடாத எல்லையற்ற இன்பக்கடல் என்று அந்தராதிகரணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ப்ருஹதாரண்ய உபநிஷத்தில் 'அத்ருஷ்டோ த்ரஷ்டா, அஶ்ருதஶ் ஶ்ரோதா, அவிஜ்ஞாதோ விஜ்ஞாதா' [பார்க்கப்படாதவன், ஆனால் தான் பார்க்கிறவன்; அறியப்படாதவன், தான் எல்லாம் அறிபவன்; ஸகல நிர்வாஹகனான ஸர்வாந்தர்யாமி] என்று சொன்ன ப்ரகாரம், முண்டகோபநிஷத்தில், 'எல்லா வித்யையைக் காட்டிலும் மேலானது ப்ருஹ்ம வித்யை, அதனால் பகவானை ஸாக்ஷாத்கரிக்கவேண்டும்'. 'அத பரா யயா ததக்ஷரமதிகம்யதே' என்று சொல்லி, அப்படிப்பட்ட பகவான் 'அத்ரேஶ்யம் அக்ராஹ்யம் அகோத்ரம் அவர்ணம் அசக்ஷுஃஶ்ரோத்ரம்........நித்யம் விபும் ஸர்வகதம்........அவ்யயம் யத்பூதயோநிம்' என்று அவன் கண் முதலியவற்றுக்குக் காணப்படான்; நித்யன்; எல்லாவற்றிலுமிருப்பவன்; ஜகத்காரணம்; என்றும், 'அக்ஷராத் ஸம்பவதீஹ விஶ்வம்' என்றும், அவன் தன் ஞானரூபமான ஸங்கல்பத்தால் 'தபஸா சீயதே' என்று வைஹுவான இந்த ஜகத் உண்டாகிறது என்

றும், "கூஷிஹ்ணு விஜ்ஞாதெ ஸவ்ஃமிதம் விஜ்ஞாதம்", "தஹெ தச ஸகூம்" என்றும், நல்ல புண்யங்களைச் செய்தவர்கள் சதுர்முக ப்ரம்ம லோகமடைகிறார்கள் என்றும், ஆனால், 'ஹூவா ஹெலூஹெதெ கூஷூஜா யஜ்ஞரூவாஃ' என்று கேவலம் ஒரு பயனை உத்தேசித்துச் செய்யும் கர்மங்கள் த்வாரமுள்ள தோணிக்கு ஸமாநம். 'ஜராஸ்ரூ தெ௭ வாநமெபி வாவியந்தி' என்று மறுபடியும் பிறப்பு இறப்புக்குக் காரணம் என்றும், 'ஸவாபரஷோ கூவுயாத்மா' பரமபுருஷன் அழிவற்றவன், 'ஸவஜ்ஞு ஸவவிகஃ' ஸகலமும் தெரிந்தவன்; ஸகல சக்தியுடையவன்; அவனிடத்திலிருந்து, 'கூக்ஷராக விவியாஹேஸாஃவாவாஃ ப்ரஜாயதெ தத்ர வெவாவிபந்தி' ஸகலமும் அவனிடத்தில் உண்டாகி, அவனிடத்தில் லயிக்கிறது என்றும், 'கூஷி3மூயூா வக்ஷுஷீ வநூஸூயெள திஸஸ்ரூாம்த்ர வாஹிவூதாஸூ வெஷாஃ। வாயுஃப்ராணஃ ஹூதயம்விஸூம் கூஸுவதஷுூம் ப்ரூவீஹஷ ஸவஸூதாநாதூா' என்று எம்பெருமான் ஶிரஸ் அக்கி அல்லது மேலுலகம்; சந்த்ர ஸூர்யர் அவன் கண்கள்; அவன் வாக்கால் வேதம்......அவன் ஹ்ருதயம் ஜகத்.........அவன் எல்லாவற்றிலும் அந்தராத்மா என்று சொல்லி, அவன், 'கூக்ஷராக வாதஃவாஃ' என்று ஸூக்ஷ்மமான ப்ரக்ருதியைப் பஞ்ச பூதங்களைக் காட்டிலும் வேறானவும், மேலான ஜீவர்களைக்காட்டிலும் வேறான மேலான பரம புருஷன் என்றும், அப்படிப்பட்டவன் ஒரு பயனைக் கோராமல் அவனுடைய ஆராதநமாக ச்ரத்தையோடு கர்மங்களை அநுஷ்டித்து அவனை த்யாநம்செய்தால் அவனை யடையலாம் 'தவஸூ ஸெமெ ஹூவவஸதி........விரஜாஃ ப்ரயாந்தி யத்ரா ஹூத ஸவாஷ' என்றும், அவன் முக்தர்களின் போக்யவஸ்து; அவனை ஹ்ருதயகமலத்திலிருக்கும்படி த்யாநம்செய்து மஹா ப்ரேம பக்தியாகிற ஜ்ஞாநத்தால் ஸாக்ஷாத்கரிக்க ஸகலவித அஜ்ஞாநமும் தொலையும் என்றும், 'வஸாஹூதம் ஹதஹெூா மெவதிஹிதம் யஹாயாம் ஹொவிஹூாமூம்யம் விகிரதி ஜஹ' என்று அத்ருச்யத்வாதிகாரணத்தில் குறிக்கப்பட்ட முண்டகோபநிஷத் வாக்யங்களால் நிச்சயிக்கப்படுகிறது.

'அக்நிர் மூர்த்தா சக்ஷுஷீ சந்த்ரஸூர்யௌ.........' என்று அவனுக்கு ஸகல லோகமும் ஶரீரமாக ரூபம் முண்டகோபநிஷத்தில் சொல்லப்பட்டதல்லவா? இந்த மாதிரி சாந்தோக்யஉபநிஷத்தில் வைஶ்வாநர வித்யையில் சொல்லப்படுவது அடுத்த அதிகரணத்தில் விவரிக்கப்படுகிறது. பகவானை வைஶ்வாநரன் என்று சாந்தோக்யம் V - 18-ல் சொல்லப்பட்டிருக்கிறது. 'தஸ்ய ஹ வா ஏதஸ்யாத்மநோ வைஶ்வாநரஸ்ய மூர்த்தைவ ஸுதேஜா: சக்ஷுர் விஶ்வரூப: ப்ராண: ப்ருதக்வர்த்மாத்மா ஸந்தேஹோ பஹுலோ பஸ்திரேவ ரயி: ப்ருதிவ்யேவ பாதௌ' வைஶ்வாநரனாகிற பரமாத்மாவுக்கு ஶிரஸ், தேஜஸ், கண், விஶ்வரூபம், பிராணனை அநேக மார்க்கங்களாகவும் இப்படி நிரம்ப விவரிக்கப்படுகிறது. இப்படி இருக்கிறவனை 'ய ஏதமேவம் ப்ராதேஶமாத்ரமபிவிமாநம் ஆத்மாநம் உபாஸ்தே' என்று அளவுக்குட்பட்ட சிறியதாய் த்யானம்செய்து பக்வமான நிலையடைந்தால், 'ஸர்வேஷு லோகேஷு ஸர்வேஷு பூதேஷு ஸர்வேஷ்வாத்மஸ்வந்நமத்தி', அவன் ஸகல லோகங்களிலும் எல்லாவற்றையும் அநுபவிப்பதாக ப்ரஹ்மாநுபவத்தைச் சொல்லி, 'தத்யதேஷீகாதூலமக்நௌ ப்ரோதம் ப்ரதூயேதைவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே' (V-24) என்று ஸகல பாபங்களையும், தீயில் போட்ட வஸ்து பஸ்மமாய் விடுவதுபோல ('தீயினிற்றூசாகும்') ப்ரஹ்மஜ்ஞாநி போக்குகிறான் என்று சொல்லுகிறது.

ப்ரஶ்ந உபநிஷத்திலும் 'ஸ ஏஷ வைஶ்வாநரோ விஶ்வரூப: ப்ராணோऽக்நிருதயதே' என்று பகவான் ஸகல ரூபங்களையும் பரிக்ரஹித்துக்கொண்டு, ப்ராணனும் அக்நியாயும் மேலே கிளம்புவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது 'ஸ ஏனம் ஷாஸ்தி வைஶ்வாநரோ ராயஸ்து [illegible]' என்று ரிக்வேத ஸம்ஹிதையிலும், '[illegible] ஷ ஏவேதம் ஸர்வம்' என்று ஶ்வேதாஶ்வதரத்திலும் நிருபாதிகமான புருஷத்வத்தையுடைய புருஷோத்தமன் வைஶ்வாநரன் பகவான் என்று நன்றாய் ஏற்படுகிறது.

எஸ். கோபாலஸ்வாமி அய்யங்கார்.

(இன்னும் வரும்)

ஸ்ரீ:

# கடிதங்கள்.

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு:—

நாளது௵ ஐப்பசி௴-த்திய ஸஞ்சிகையில் ராயம்பேட்டை க்ருஷ்ணமாசார்யர் ஸ்வாமி ௸ வர்ஷம் வைகாசி௴-த்திய ஸஞ்சிகையில் அடியேனால் எழுதப்பட்ட குருபரம்பரையின் அநுஸந்தாந க்ரம விஷயத்தில் சில ந்யாய விருத்தம் என்றும் ஸ்ரீதேசிக ஸூக்தி விரோதமென்றும் எழுதியிருப்பதால் ௸ விஷயத்தில் அடியேனுடைய அபிப்ராயத்தை ராயம்பேட்டை ஸ்வாமிக்கு முதலில் தெரியப்படுத்தி, பிறகு ஸ்ரீதேசிகஸூக்தியின் அவிரோதத்தையும் ஆநுகூல்யத்தையும் தெரிவிக்கிறேன்.

முதலில் அடியேன் ‘ஸவா.........பம்’, ‘யதா.........ராம்’ இத்யாதி ப்ரமாணங்களால் **வேதாந்தார்த்தோபதேஶ காலத்தில்** ஆசார்யனுடைய பரம்பரையை அநுஸந்திக்க வேணுமென்று ஏற்படுகிறது என்பதையும், முண்டகோபநிஷத் ஸ்ரீகீதை முதலிய சில ப்ரமாணங்களை எழுதினதையும் கடாக்ஷித்த ராயம்பேட்டை ஸ்வாமி, ‘எந்தக் காலத்தில் அடியேன் அவரோஹண க்ரமாநுஸந்தாநத்துக்கு ப்ரமாணம் எழுதுகிறேன்’ என்பதைத் திருவுள்ளம் பற்றவேணும். ‘வேதாந்தார்த்தோபதேச காலத்தில் என்று’ எழுதியிருக்கிறேன். அந்தக் காலத்தில் அவரோஹண க்ரம ப்ரகாஶநத்தை ஆசார்யன் செய்யவேண்டியதாக அநேக ப்ரமாணங்களோடு ஸ்ரீ ராயம்பேட்டை ஸ்வாமியும் திருவுள்ளம் பற்றுகிறார்.

அடியேனுக்கு ஆரோஹணக்ரமாநுஸந்தாநம், அவரோஹணக்ரமாநுஸந்தாநம் ஆக இரண்டும் ஸப்ரமாண மென்பதும், பூர்வாசார்ய பரிக்ருஹீதமென்றும் அபிப்ராயம். ‘ஆரோஹணக்ரமாநுஸந்தாநம் ஸப்ரமாணமோ நிஷ்ப்ரமாணமோ எப்படியிருந்தாலும் நான் அதில் ப்ரவர்த்திக்கவில்லை’ என்று எழுதினதால், தாம் எழுதவேண்டி நேரிட்டதாத அந்த ஸ்வாமி எழுதியிருக்கிறார்.

ஆரோஹண க்ரமாநுஸந்தாநத்தை அப்ரமாணமாக எண்ணியிருந்தால், அதற்கு அநுகுண ப்ரமாணங்களை எழுதி, அதைத் தூஷிக்காமல் எழுத வேணுமென்பதை ராயம்பேட்டை ஸ்வாமி கவனிக்கவேணும். ஆசார்யன் க்ரந்தோபதேஶ காலத்தில், அவரோஹண க்ரமமாக குருபரம்பரா ப்ரகாஶநத்தைப் ப்ராமாணிகமென்று ராயம்பேட்டை ஸ்வாமி எழுதுவதால், அடியேன், மேலே சொல்லப்போகிறபடி அநுஸந்தாநமில்லாமல் ப்ரகாஶநம் அஸம்பாவிதமாகையால், க்ரந்தோபதேஶகாலத்தில் அவரோஹண க்ரமாநுஸந்தாநத்தைச் செய்வது ப்ராமாணிகமென்று ஒப்புக்கொள்வதால் அந்த விஷயத்தில் அடியேனுக்கு விவாதமேயில்லை. ஆரோஹண க்ரமாநு

ஸந்தாநத்தை ஶிஷ்யன் விமர்ஶ காலத்தில் ஸ்வயம் செய்துகொள்ளவேண்டியதாக எழுதுகிற ஸ்ரீ ராயம்பேட்டை ஸ்வாமிதான் இக்காலத்தில் க்ரந்தோபதேஶகாலத்தில் அநேக ஆசார்யர்களால் அநுஷ்டிக்கப்பட்டுவரும் ஆரோஹண க்ரமாநுஸந்தாநத்தை அங்கீகரிக்கமாட்டார்போல் தோன்றுகிறது.

ஸாராஸ்வாதிநியில் ஆரோஹணாநுஸந்தாநத்தை ஶிஷ்யன் விமர்ஶ காலத்தில் செய்யவேண்டியதாக ஸாதித்திருப்பதால், க்ரந்தோபதேஶ காலத்தில் அந்த க்ரமம் அநுசிதமாகுமே யென்று, வேறு ஏதாவது ஒரு விஷயத்தில் ப்ரதிபந்நாரோஹண க்ரமம் அந்வயிக்கவேண்டியதை உத்தேசித்து, ஶரணாகதி விஷயத்தில் இருந்தாலும் இருக்கலாம் என்று எழுதினேன். அதுவும் அடியேனுடைய விசாரத்துக்கு அவிஷயம். ஆகையினால்தான் அநாஸ்தையினால் அப்யுபகம்யமென்று எப்படியாவது ஒரு பக்ஷத்தில் இருக்கட்டும் என்று எழுதினேன். ஆகையினால் அது தூஷணத்திற்கு விஷயமல்ல.

ராயம்பேட்டைஸ்வாமி அபிப்ராயப்படி ஆசார்ய ஶிஷ்யர்களுக்குக் கால விஶேஷத்தில் ப்ரகாஶநாநுஸந்தாநங்கள் வ்யவஸ்திதங்களானால், தத்காலத்தில் க்ரந்தோபதேஶகாலத்தில் ஆசார்யஶிஷ்யர்கள் இருவரும் குருபரம்பரையை ஒரேவிதமாக அநுஸந்திப்பதற்கு ராயம்பேட்டைஸ்வாமி ப்ரமாணம் சொல்லவேண்டிவரும். அநேக ஆசார்யர்கள் க்ரந்தோப தேஶகாலத்திலும் ஆரோஹணரூபமாகவே குருபரம்பராப்ரகாஶநம் பண்ணுவது ஸுப்ரஸித்தமாயும் இருப்பதை ஸ்ரீராயம்பேட்டை ஸ்வாமி தெரிந்துகொண்டவர்தானே.

ஷை ஸ்வாமி, ‘ஆசார்யஸ்ய வம்ஶே பாராஜ்ஞ: ஆ வா ...... ஹ்ருதவத:’ என்கிற ஶ்ருதியில், ‘ஆ’ என்கிற அவ்யயத்திற்கு ஆரம்பார்த்தகத்வம் சொல்லக்கூடாது; முடிவு என்று தான் அர்த்தம் சொல்லவேணும்; ஏனென்றால், ‘ஆசார்யஸ்ய’, ‘வம்ஶ’ என்கிற பதத்வயஸ்வாரஸ்யத்தில், ‘ஆசார்ய’ என்றும் பூர்வாவதி ஸ்வத: உபஸ்திதமென்று எழுதியிருக்கிறார். நிருபபதமான ஆசார்யபதம் ‘ஆசிநோதி’ என்று சொல்லப்படும் லக்ஷணம் பொருந்திய யாவரையும் சொல்லுமாகையினால் ஒரு வ்யக்தியைக் குறிப்பிடாது. அப்படி குறிப்பிட்டாலொழிய பூர்வாவதி ஸ்வத: உபஸ்திதமாகாது.

தவிரவும் இங்கு ‘ஆசார்யஸ்ய வம்ஶ:’ என்று ஏகவசநாந்த விக்ரஹம் செய்தால் இந்த ஆசார்யஶப்தம் தன் ஆசார்யனைக் குறிப்பிட்டாலும் குறிப்பிடலாம். இங்கு ஏகவசநாந்தவிக்ரஹம் செய்யக்கூடாது. ஏனென்றால், அப்போது மநுவம்ஶ, யதுவம்ஶ: என்கிற இடத்தில் போல் ஆசார்ய வம்ஶ, என்கிற இடத்திலும், ஆசார்யனுடைய புத்ரபௌத்ரபரம்பரையை

யோ அல்லது ஶிஷ்யப்ரஶிஷ்ய பரம்பரையையோ சொல்லவேண்டி வருவது ப்ரஸித்தார்த்தமாகும். அது ப்ரக்ருதாஸங்கதார்த்தமாகையினால் ‘ஆசார்யாணாம் வம்ஶ:’ என்று ஷஷ்டீபஹுவசநாந்தத்தோடு விக்ரஹம் செய்யவேண்டியது ந்யாய்யமாகும். ஏவஞ்ச, ஆசார்யர்களுடைய பரம்பரை ஜ்ஞாதவ்யமென்றதாயிற்று. அப்பரம்பரையில் ஈஶ்வரனும் ஆசார்ய கோடியில் சேர்ந்தவன் என்பதை வெளிப்படுத்துவதற்காக ‘ஆபகவத்த:’ என்று சொன்னது. இவ்விடத்தில் ‘ஆ’ பதத்திற்கு ‘ஆரப்ய’ என்றும், முடியவும் என்றும் இரண்டு அர்த்தமும் விவக்ஷிதம்தான். க்ரமத்தை விதிப்பதற்காக இந்த வாக்யம் ப்ரவ்ருத்தமல்ல. இப்படி பஹுவசநாந்த ஸமாஸம் விவக்ஷிதமென்பதையும் ஆசார்யபதம் பகவத்பர்யந்தமாயாவது அல்லது ஸ்வாசார்யபர்யந்தமாயாவது உள்ள ஸர்வாசார்யபரம் என்பதையும், ‘ஆசார்யாணாம் அஸாவஸாவித்யாபகவத்த:’ என்கிற ஶ்ருதியே வெளியிடுகிறது. ஆகையால் ‘ஆசார்யவம்ஶ:’ என்கிற பதத்வயத்தினால் பூர்வாவதி ஸ்வத: உபஸ்திதமாகாதென்று சொல்லலாம்.

யதிராஜஸப்ததியில் காணப்படும் அவரோஹண க்ரமம், ஆசார்யன் க்ரந்தோபதேஶகாலத்தில் செய்யவேண்டிய குருபரம்பரா ப்ரகாஶநத்தை த்ருடப்படுத்துவதாக ராயம்பேட்டை ஸ்வாமி எழுதியிருக்கிறார். ஸ்ரீ தேசிகன் யதிராஜனை ஸ்துதிக்க யத்நித்தாரேயொழிய, க்ரந்த ப்ரவசநத்துக்கு இங்கு ஆரம்பித்தாரில்லை யென்பது ஸுஸ்பஷ்டமாகையினால், ஸ்வாநுஸந்தாந காலத்திலும் அவரோஹணக்ரமமும் ஸ்ரீதேசிகாபிமதமென்பது வெளியாகிறது.

இதன் மேல் ராயம்பேட்டை ஸ்வாமி, பகவானையும் ஆசார்யனையும் சேர்த்து அநுஸந்திக்குமிடத்தில் தான் இந்த க்ரமவிவக்ஷையென்று எழுதுகிறார். இப்படி நியமம் சொல்ல ஷை ஸ்வாமி திருவுள்ளம்தவிர வேறு ப்ரமாணம் தெரியவில்லை. ஸ்ரீ தேசிகன் குருபரம்பரையை ஸாதித்த வரையில் நடுவில் ஒருவரையும் விடாமல் ஸாதித்திருப்பதால், ஏன் இந்த இடத்திலும் க்ரமவிவக்ஷை செய்யக்கூடாது?

முண்டகோபநிஷத் சொன்னபடி அவரோஹண க்ரமாநுஸந்தாநம் க்ரந்தோபதேசகாலத்தில் ஆசார்ய கர்த்தவ்யமாக அங்கீகரிக்கும் ஸ்வாமிக்கு, ஷை உபநிஷத்தில் விதிவாக்யம் இல்லாததனால், அதைக் கல்பிக்க வேண்டிவரும். இதைவிட, ‘ஆசார்யவம்ஶோ ஜ்ஞேய:’ என்கிற வாக்யமே அவரோஹணக்ரமாநுஸந்தாந விஷயத்திலும் விதாயகமாகலாம். புதிதாக விதிவசந கல்பநத்தைச் செய்வதைக் காட்டிலும் ஆரோஹண க்ரம விதாநத்துக்காக ஒப்புக்கொள்ளப்பட்ட வாக்யத்திற்கே அவரோஹண க்ரம விதாயகத்வமும் அங்கீகரிக்கப்படலாம். தந்த்ரநிர்த்தேஶாதிகளை ஶாஸ்த்ரஜ்ஞர்கள் அநேக ஸ்தலங்களில் அங்கீகரிக்கிறார்கள்.

ராயம்பேட்டை ஸ்வாமி, 'ஆசார்யாத் வம்ஸம்' என்கிற வாக்யம் அவரோஹண க்ரமாநுஸந்தாநத்திற்கு விதாயகமாகக் கூடாதென்று ஸாதித்தால், முண்டகோபநிஷத்தோ, மற்ற எந்த வாக்யமோ அவரோஹண க்ரமத்தை விதிப்பதாகச் சொன்னால், அது அடியேனுக்கும் இஷ்டம்தான். க்ரந்தோபதேஸகாலத்தில் அவரோஹண க்ரமாநுஸந்தாநத்தைத் தூஷிப்பது அப்ரமாணம் என்பதுதான் என் அபிப்ராயம். தத்காலத்தில் ஆரோஹண க்ரமாநுஸந்தாநம் அப்ரமாணம் என்பதை ஸாராஸ்வாதிநீ ப்ரதர்ஸந பூர்வகம் ராயம்பேட்டைஸ்வாமியே எழுதியிருக்கிறார்.

தவிரவும், "ஆசார்யன் க்ரந்தப்ரவசந காலத்தில் அவரோஹணக்ரமமாக குருப்ரகாஸநம் பண்ணவேணும். ஸிஷ்யன் ஸ்வயமாக விமர்ஸிக்கும் போது ஆரோஹண க்ரமமாக அநுஸந்தாநம் பண்ணவேணு" மென்று ராயம்பேட்டை ஸ்வாமி எழுதுகிறார். இது 'யதாவத் ஸம்யக் ப்ரோவாச தாம் தத்த்வதோ ப்ரஹ்ம வித்யாம் ... வம்ஸம் வம்ஸம்' என்கிற வாக்ய ஸ்வாரஸ்ய விருத்தம். இந்த வாக்யம் உபதேஸகாலத்திலிறே ஆசார்யனுக்குக் குருபரம்பராநுஸந்தாநத்தை விதிக்கிறது. இனி இந்த இடத்தில் 'ப்ரோவாச' என்கிற பதத்துக்கு ப்ரகாஸநம் அர்த்தம் என்று தாம் ஏற்படுத்தின வ்யவஸ்தார்த்தம் சொல்லில் 'ஸ்வா......ஜேஜுஷ்' என்கிற இடத்தில் ப்ரகாஸநமும் அர்த்தமும் ஆகக்கூடாதா?

ஸ்ரீதேசிகன் "'ஸ்வாத்யாய' என்கிற ஸ்ருதிக்கு ஸிஷ்யாநுஸந்தாநம் தான் அர்த்தம்; ஆசார்யக்ருத்ய ப்ரகாஸநம் அர்த்தமன்று" என்று ஓரிடத்திலும் அருளிச்செய்தாரில்லை. ப்ரகாஸநம் அநுஸந்தாந பூர்வகமில்லாமல உண்டாகாதாகையால் அநுஸந்தாநம் சொன்ன இடத்தில் ப்ரகாஸநமும், ப்ரகாஸநம் சொன்ன இடத்தில் அநுஸந்தாநமும் ஸ்ரீதேசிகனுக்கு விவக்ஷிதம்தான். ஆகையினால்தான் 'அஸ்மத்குருப்ய:' என்னும் ஸ்லோகத்தைத் தாம் ஸிஷ்யனுக்கு உபதேசிக்கும் ஸமயமல்லாத குருபரம்பராஸார க்ரந்தத்தில் நிபந்தித்தார்.

இங்கு ஸாரதீபிகா வ்யாக்யையில், 'ப்ரகாஸநம் அநுஸந்தாநத்தை விட்டு இராமையால், அநுஸந்தாநத்தற்குப் பக்தி பூர்வகத்வம் அர்த்தாத் ஸித்தமிறே.' என்று இவ்விரண்டுக்கும் அவிநாபாவம் சொல்லியிருக்கிறது. இப்படியிருக்க, ப்ரகாஸநம் ஆசார்யக்ருத்யம் அநுஸந்தாநம் ஸிஷ்யக்ருத்யம் என்று சொன்னால், ஆசார்யன் அநுஸந்திக்காமலும் ஸிஷ்யன் வாயால் சொல்லாமலும் இருக்கவேணுமோ? என்று ஸங்கை உண்டாகிறது.

குருபரம்பராஸாரத்தில் ஸ்ரீதேசிகன் அவரோஹண க்ரமத்தை அநுஸந்தித்திருக்கிறார் என்பதற்கு ஸமாதாநமாக, 'ஓதப்பட்டது' என்பதோடு

பூர்வநுஸந்தாநப்ரகரணத்தை முடித்து விட்டதாகவும், மேல் குருபரம் பராப்ரகாஶநார்த்தம் ஸித்தாந்தரயோஸ்ஸாம்யப்ரதிபாதநத்தாவ நாயும் குருபரம்பரையை அஸாதாரண்யேந ஆரம்பியா நின்று கொண்டு முதலில் ஈஶ்வரனைக்காட்டியருளினர் என்றும், இது முதலாக குருபரம்பரா ப்ரகாஶநார்த்தமாகையால் அவரோஹணக்ரமாநுஸந்தாநத்துக்கு ஸாதக மன்று என்றும் ராயம்பேட்டை ஸ்வாமி எழுதியிருக்கிறர். இந்த ஸ்வாமி எழுதினபடி குருபரம்பராப்ரகாஶநமே இங்கிருந்தாலும், ஆசார்யன் ஶிஷ்யனுக்கு க்ரந்தோபதேஶ ப்ரகரண மில்லாமையாலே அவரோஹணக்ரம லேகநம் எப்படி கூடும்? குருபரம்பராநுஸந்தாநமும் ப்ரகாஶநமும் பிந்ந கர்த்ருகமன்று என்றும் ஸ்ரீதேசிகனுக்கு க்ரமவிவக்ஷையில் தாத்பர்யநியம மில்லையென்றும் சொல்லும் எனக்கு ஏன் ஸங்கதமாகாது?

'லக்ஷ்மீநாத ஸமாரம்பாம்' என்கிற ஆழ்வான் அநுஸந்தாநத் துக்கு ராயம்பேட்டை ஸ்வாமி வ்யக்திவிஶேஷ நிர்த்தேஶ பூர்வகாநுஸந்தா நத்தில் 'ஆஸா......த்' என்கிற ஶ்ருதிக்ரமநிர்ணயார்த்தம் ப்ரவர்த் திக்குமென்றும், மற்ற இடத்தில் ஔசித்யாநுஸாரியான இச்சையே நியாமிகை யென்றும் எழுதுகிறர். இப்படி நியமம் கல்பிப்பதற்கு ராயம் பேட்டை ஸ்வாமி திருவுள்ளம் தவிர வேறு ப்ரமாணம் தெரியவில்லை. இதற்கு மேல் 'லக்ஷ்மீ நாத' வ்யாக்யாநத்தில், இது ஆழ்வான் அநுஸந்தாந க்ரமம் என்றும், 'அஸ்மதாசார்ய ஸமாரம்பாம் யதிஶேகர மத்யமாம்' என்று எழுதியிருப்பது மற்றவர்கள் அநுஸந்தாநம் என்கிற வ்யாக்யாநத் தை ஆழ்வான் பரம்பரையை அநுஸந்தித்தவர்கள் அநுஸரிக்கமாட்டார்கள். ஆழ்வான் அநுஸந்தித்த யதா ஶ்ருதக்ரமத்தைத் தூஷிக்காமல் இப்படியும் அநுஸந்திப்பார்கட்கு இது அநிஷ்டமுமன்று. இதனுல் இந்த ஶ்லோகத் துக்கு வாத்ஸ்யாஹோபிலாசார்யர் செய்ததாக எழுதியிருக்கும் க்லிஷ்ட கல்பநவ்யாக்யாநமும் தத்தோத்தரமாய்த்து. ஸ்ரீபாஞ்சராத்ர ரக்ஷையில் ஆத்மனோ வாஸுதேவ வ்யுத்தி பூர்வகம் த்யாநம் விவக்ஷித மென்று ஆரம்பித்து, 'ஸவ்யுத்பராஸ்ஹீயதோஹம் ஹ்மவத் ... வ்யுத்தி ... நிர்தேஶ ... யதாயதம்' இத் யாதி ஸ்ரீஸூக்திகளால் ஶ்ருதியில் 'ஆ' பதத்திற்கு ஆரம்பார்த்த கத்வம் ஸ்ரீஸூக்தி விபரீதம் என்று ராயம்பேட்டைஸ்வாமி எழுதியிருக் கிறர். இது அடியேன் 'பகவானளவும் செல்ல' என்று அடியிலேயே எடுத் துக் காட்டினதோடு அநிகார்த்தமன்று.

இவ்விடத்திலும் மற்றை இடங்களிலும் ஸ்ரீ தேசிகன், பர்யந்தம் என் கிற அர்த்தத்தை 'ஆ' என்கிற அவ்யயத்துக்கு எழுதியிருக்கிறரே யொ ழிய ஆரம்பார்த்தகத்வத்தைத் தூஷிக்கவில்லை. ஸ்ரீ தேஶிகனுக்கு ஶ்ருதி

யில் ஆரம்பார்த்தகத்வம் அநிஷ்டமானுல் ஸாரவிவரணீ முதலிய க்ரந்த கர்த்தர்கள் அதைத் தூஷித்ததுபோல் ஏன் தூஷித்திருக்கக்கூடாது? ஸர்வ ஜ்ஞான தேஶிகனுக்கு இந்த அர்த்தம் தோன்றவில்லை யென்று சொல்ல லாமா? அக்காலத்தில் தென்னுசார்யர்கள் அவரோஹண க்ரமமாக 'நாயும் பங்கஜநேத்ரம்' என்றும், 'தைவதம்' என்றும், 'திருவருள் மால்' என்றும் அநுஸந்திப்பது ஸ்ரீ தேசிகனுக்கு அநிஷ்டமானுல் அதைத் தூஷிக்காமல் இருப்பரா? வாத்ஸ்யாஹோபிலாசார்யர், 'லக்ஷ்மீநாத' என்னும் தனியன் கூரத்தாழ்வானுக்கு மாத்ரம் அநுஸந்தேயம்; மற்றவர்கள் 'அஸ்மத்குரு ஸமாரம்பாம்' என்று அநுஸந்திப்பார்களென்று சொன்னதுபோல் ஸ்ரீதேசிகன் சொல்லியிருக்கக்கூடாதா? அல்லது 'லக்ஷ்மீநாத ஸமாரம்பாம்' என்பதை ஸ்ரீ தேசிகன் அநுஸந்திக்கவில்லை யென்று சொல்ல ப்ரமாணம் உண்டா? ஆகையினுலும், மேல் எழுதப்போகிற ப்ரமாணங்களினுலும் ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகனுக்கு க்ரம விவக்ஷையில் இந்த ஶ்ருதிக்குத் தாத்பர்யம் சொல்ல இஷ்டமில்லை யென்று சொல்வது ந்யாய்யமாகும்.

இங்கு ஸ்ரீ பாஞ்சராத்ர ரக்ஷையில் த்யாநத்துக்குக் குருபரம்பரா ப்ரபத்தி பூர்வகத்வம் ஆவஶ்யகம் என்பதைச் சொல்வதற்காக இந்த ப்ரகரணத்தில் ரஹஸ்யாம்நாயத்தை எழுதினுரே தவிர குருநதிக்ரம விதாநத்துக்காக எழுதவில்லை யென்பது, 'அத்ர பஞ்சராத்ர ஸமாராதந ப்ரவ்ருத்தி ஸமுசிதம் த்யாநம் விவக்ஷிதம்' என்கிற ப்ரதிஜ்ஞா வாக்யத்தினுலும், 'ஏவம் ஸ்ரீநாராயண விஷய த்யாந ப்ரவ்ருத்தி ஸமுசிதம் ஸமஸ்தம் ப்ரதர்ஶிதம்' என்கிற உபஸம்ஹார வாக்யத்தினுலும், நடுவில் 'பஶ்சாத்' என்றும், 'ததைவ' என்றும் எழுதப்பட்டுள்ள வாக்யாந்தரங்களாலும் ஸித்தம்.

அவரோஹண க்ரமாநுஸந்தாநத்தை யதிராஜ ஸப்ததியிலும் கீழ்ச் சொன்ன இடங்களிலும் அநுஷ்டித்துக் காண்பிக்கையினுலும் பூர்வாநுஷ்டாநத்தை தூஷிக்காததினுலும் முண்டகம் முதலான உபநிஷத் ப்ரஸித்தியை, ராயம்பேட்டை ஸ்வாமி சொல்வதுபோல், ஆசார்யன் க்ரந்தோபதேஶ காலத்தில் குருப்ரகாஶ பரமென்று வ்யவஸ்தை பண்ணுததனுலும், இப்படி வ்யவஸ்தை பண்ணுவார்க்கு க்ரந்தோபதேஶ பிந்ந ஸ்தலங்களிலுள்ள அவரோஹண க்ரமத்துக்கு வேறுவழி கல்பிக்கவேண்டி வருவதாலும், 'விஷ்ணு ஸ்ரீ' முதலான அநாதியான ஸம்ப்ரதிபந்நாசாரமிருப்பதாலும் இங்கு 'ஸ' பதத்துக்கு ஆரம்பார்த்தகத்வம் தேசிகனுக்கு அபிப்ரேதந்தான்; விருத்தமன்று.

ஸ்ரீ பாஞ்சராத்ர ரக்ஷையில் குருப்ரம்பரா ப்ரபத்தி பூர்வகமென்னும் குருபங்தி ப்ரபதநம் என்னும் வாக்யத்தையும், இங்கு 'ஶரணம்' 'வ்ரஜ' என்னும் பதங்களின் ஸ்வாரஸ்யத்தையும் பராமர்ஶித்தால் 'வ்ரஜ' என்னும் பதம் சரணாகதியைச் சொல்லலாமென்று எழுதினேன். வேறு அர்த்தமானாலும அநாஸ்தயா எழுதினதற்கு உத்தரத்திலும் அநாஸ்தயா இருக்கலாம். சில ப்ரௌட வ்யாக்யாதாக்கள் தங்கள் ப்ரௌடதயை அவலம்பித்துப் பரமதத்தையும் அர்வாருஹ்ய வாதமாய் எழுதுவது உண்டாகையால், இங்கு ப்ரகாஶாநுஸந்தாந விபாகங்கள் சில க்ரந்தஸ்தங்களானாலும் விரோதமில்லை. இப்படியில்லாவிட்டால் சில நாளைக்கு முன் ராயம்பேட்டை ஸ்வாமியால் 'ஆங்காரங்கள் சார்ங்கம் சங்காக' என்கிற பாசுர வ்யாக்யாநமான ஸாராஸ்வாதிநீ முதலிய வ்யாக்யாநத்தில் ஷோடஶாயுத ஸ்தோத்ர விருத்தமாக 'ஸாத்விகாஹங்காரம் ஶங்கம், தாமஸாஹங்காரம் ஶார்ங்கம்' என்றும் எழுதியிருப்பது எப்படி ஸங்கதமென்று கேட்கப்பட்டிருந்த ப்ரஶ்நத்துக்கு வேறு என்ன ஸமாதாநம் சொல்லக்கூடும்?

ஆகையினால் இல்லாத நியமங்களை ஏற்படுத்தி அநேக ப்ரமாணங்களுக்கும் ஆசாரங்களுக்கும் விரோத பரிஹாரத்துக்கு ஶ்ரமப்படுவதைக்காட்டிலும், நியம விபாகத்தை ஏற்படுத்தாமல் இருப்பது 'வ்ருக்ஷாஜநாதி' என்கிற ந்யாயத்துக்கு ஒத்ததாகும்.

புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர்.

(இன்னும் வரும்.)

---


ஸ்ரீ:.

## வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

| | | | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|
| வேதாந்ததீபிகை ஸம்புடம் | III | ... | ... | 2 | 0 | 0 |
| Do | V | ... | ... | 2 | 0 | 0 |
| Do | VI | ... | ... | 2 | 0 | 0 |
| Do | VII | ... | ... | 3 | 0 | 0 |

1916-ம் வருஷம் டிஸம்பர் மாஸத்தில் சேர்ந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸதஸ்ஸின் சாயா படம் (Group Photo) விலைக்கு அகப்படும். காபி ஒன்றுக்கு ரூபாய் 2. படத்தை அபேக்ஷிக்கிறவர்கள் மயிலாப்பூர் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை கார்யதர்ஶிகளுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.


22

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:.

# மதராஸ்

# ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின்

## 1916-17-ம் ஷஷ்த்திய வர்ஷாந்த அறிக்கை.

அங்கத்தினர் ஸங்க்யை :—(வர்ஷ ஆரம்பத்தில்)

| | |
|---|---|
| முதல் வகுப்பு அங்கத்தினர் ... ... ... | 49 |
| இரண்டாவது வகுப்பு ,, ... ... ... | 120 |
| ஷை வகுப்பில் ஸார்வத அங்கத்தினர் ... | 1 |
| ஆக ... | 170 |
| ஸபையின் அங்கத்தினராக இல்லாமல் தீபிகையை மட்டில் க்ரயத்துக்கு வாங்கிக்கொண்டவர்களின் தொகை. | 178 |
| ஆக ... | 348 |
| ஆனரெரி மெம்பர் ... | 10 |

(வர்ஷம் முடிவில்)

| | |
|---|---|
| முதல் வகுப்பு அங்கத்தினர் ... ... ... | 51 |
| இரண்டாவது வகுப்பு ,, ... ... ... | 255 |
| ஷை வகுப்பில் ஸார்வத அங்கத்தினர் ... | 1 |
| ஆக ... | 307 |
| தீபிகைச்சந்தாதாரர் ... | 3 |
| ஆக ... | 310 |
| ஆனரெரி மெம்பர் ... | 9 |

எக்ஸிக்யுடிவ்போர்ட் :— வர்ஷாரம்பத்தில் இவர்களின் தொகை:—32 ; இவர்களுள்,

| | | |
|---|---|---|
| ஸபாத்யக்ஷர் | ... ... ... ... | 1 |
| உபஸபாத்யக்ஷர் | ... ... ... ... | 2 |
| கார்யதர்ஶிகள் | ... ... ... ... | 2 |
| மற்றை அங்கத்தினர் | ... ... ... | 27 |

சென்ற மார்கழி மாஸத்தில் நடைபெற்ற வார்ஷிக மஹாஸங்கத்தில், இவர்களுள் 2 - பெயர் நீங்கலாக மற்றை 30 - பெயரும், அவர்களுடன் இன்னும் 6 - பெயரும், ஆக 36 - பெயர்கள் இவ்வர்ஷத்தின் போர்டார்களாக நியமிக்கப்பட்டனர். தவிரவும், அந்த ஸங்கத்திற் செய்யப்பட்ட புதிய நியமப்படி, ஶாஶ்வத அங்கத்தினராயுள்ள ஒருவரும் போர்டில் இருக்கும்படி ஸம்பவித்தது. ஆக, போர்டார்களின் தொகை 37 - ஆக இருந்தது. வர்ஷம் முடிவில், இவர்களுள் 5 - பெயர் வர்ஷச் சந்தாவைச் செலுத்த இஷ்டமில்லாதவர்களாக இருந்தபடியால், அவர்களுடைய பெயர் எடுபட்டுப்போக, போர்டாரின் தொகை 32 - ஆக இருக்கிறது.

இவ்வர்ஷத்தில் இவர்கள் 5 - தடவை சேர்ந்தார்கள். ஸபைக்கு உரிய பல விஷயங்களைப்பற்றி ஆலோசித்துக் கார்யதர்ஶிகளுக்கு வேண்டுவதான உதவிபுரிந்ததுடன், கார்யதர்ஶிகளாற் செய்யப்பட்டு வரும் வரவு செலவுகளையும் பரிஶீலநம் செய்து, அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட கணக்குகளையும் அங்கீகரித்து வந்தனர்.

உபந்யாஸங்கள் :—சென்ற ஸ்ரீத்து அறிக்கையில் ; 'த்ரவ்யக் குறைவினாலும், இன்னும் சில அஸௌகர்யங்களாலும் ஸரியானபடி உபந்யாஸங்கள் நடைபெறவில்லை' என்று விஜ்ஞாபநம் செய்யப்பட்டிருந்தது. அந்தக் குறையை நீக்கவேண்டுமென்று எழும்பூர் ஸ்ரீ. உப. பி. ஆர். க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, தநிகரான தம்முடைய ஸுஹ்ருத் ஒருவரிடமிருந்து உபந்யாஸார்த்தமாக ரூ 50 - சேகரித்துக் கொடுத்தார். இந்த உபந்யாஸங்கள் வ்ருத்தியடைய வேண்டுமென்று மயிலாப்பூர் ஸ்ரீ. உப. எஸ். வரதாசார்யர் ஸ்வாமி தாமே ரூ. 20 - கொடுத்தார். இந்த 70/- ரூபாயைக் கொண்டு, இந்த ஸம்வத்ஸரத்தில் 13.

உபந்யாஸங்கள் நடத்தப்பட்டன. ஸ்ரீ. உப. திருக்குடந்தை சதுஶ்ஶாஸ்த்ர வித்வான் சேஷாசார்யர் ஸ்வாமி, ஸ்ரீ. உப. வித்வான் இஞ்சிமேடு ரங்கநாதாசார்யர் ஸ்வாமி, ஸ்ரீ. உப. பகவத் விஷயம் சேட்லூர் நரஸிம்ஹா சார்யர் ஸ்வாமி, ஸ்ரீ. உப. வித்வான் புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி முதலிய வித்வான்கள் க்ருபையுடன் இந்த விஷயத்தில் அந்வயித்து, இந்தக் கைங்கர்யத்தைப் பூர்த்தி செய்து வைத்தார்கள். ஸ்ரீ பாகவதம் ஶ்ருதிகீதையைப்பற்றி 7 - உபந்யாஸங்களும், இன்னும் நமது மதஸம்பத்தமான அநேக விஷயங்களைப்பற்றிப் பல உபந்யாஸங்களும் நடைபெற்றன. ஆனால், இந்த உபந்யாஸங்களெல்லாம் ஓரே இடத்திலேயே (மயிலாப்பூரிலேயே) நடக்கும்படி ஸம்பவித்தது. இம்மாதிரியான உபந்யாஸங்களைப் பற்பல இடங்களில் பற்பல பண்டிதர்களைக்கொண்டு நடத்தி, அவைகளின் வழியாக ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தைத் தழைக்கச்செய்ய வேண்டு மென்பது போர்டார்களின் முக்யமான நோக்கம். அதற்கு அபேக்ஷிதமான ஸஹாயத்தை ஆஸ்திகப்ரபுக்கள் செய்ய வேணுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

வார்ஷிக மஹாஸங்கம்:— சென்ற 1916ஹு, டிஸம்பர்ஸீ 27, 28, 29 - ம் தேதிகளில் சென்னை, மயிலாப்பூரில் 6 - வது ஸ்ரீ வைஷ்ணவ மஹாஸங்கம் நடைபெற்ற விஷயமும், அதைப் பற்றிய மற்றை அம்ஶங்களும் ஏற்கெனவே ஸ்ரீ வேதாந்ததீபிகையில் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன. பல வைதிக வித்வான்களும் லௌகிக ஆஸ்திகர்களும் அதை அலங்கரித்து அதன் நிஷ்பத்தியை ஸம்பாதித்து வைத்தார்கள்.

ஸ்ரீ வேதாந்ததீபிகை:—யதாபூர்வம் இந்தப் பத்ரிகை நடத்தப்பட்டு வருகிறது. ஸபையின் அத்யக்ஷரான ஸ்ரீ. உப. திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர் ஸ்வாமியே அதன் ஸம்பாதகராக இருந்துவருகிறார். தமிழில் ப்ரசுரம் செய்யப்பட்டு, அதீந்த்ரியமான அத்யாத்ம விஷயங்களைப்பற்றிப் போதிப்பிக்கும் பத்ரிகைக்கு எவ்வளவு ஸஹாயம்இக்காலத்தில் ப்ராப்யமாக இருக்குமோ அவ்வளவு ஸஹாயமும் அதற்குக் கிடைத்துவருகிற தென்றேசொல்லக்கூடும். சென்ற வருஷத்தில் அதன் வருமானமே அதன் செலவுக்குப் பர்யாப்தமாக இருந்தது என்பதே எல்லாருக்கும் ஓர் ஆநந்தஹேது.

உபஸபைகள் :—இந்த வருஷத்தில் திருப்பதியில் ஏற்பட்டிருந்த ஸபை ஒன்றே இதற்கு உபஸபையாக இருந்தது. ஸபையின் 21 - வது நியமப்படி அது அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அதன் அங்கத்தினருக்கும் தீபிகை ரூ. 2/-வீதம் கொடுக்கப்பட்டுவந்தது. ஆனால், ப்ரக்ருத வருஷத்தில் அவர்களிடமிருந்து அவர்களுடைய ஸபை ஸம்பந்தமான ஒரு அம்ஸத்தைப்பற்றியும் ஸமாசாரம் கிடைக்கவில்லை. பல தடவைகளில் எழுதப்பட்ட பல கடிதங்களுக்குப் பதிலாக வர்ஷாந்தத்தில் ரூ. 25/-மணியாடர் மாத்திரம் கிடைத்தது. அதன் விவரமும் மற்றை அம்ஸங்களும் அஜ்ஞாதங்களாகவே இருக்கின்றன.

| வரவு சேலவுகள் :— | ரூ. அ. பை. |
|---|---|
| வர்ஷாரம்பத்தில் கையிருப்பு | 207 - 9 - 9 |
| வர்ஷத்தில் வரவு ... ... ... ... | 1133 - 3 - 0 |
| ஆக ... | 1340 - 12 - 9 |
| செலவு ... ... | 1135 - 1 - 2 |
| இருப்பு ... ... | 205 - 11 - 7 |
| வார்ஷிக மஹாஸங்கத்திற்காக வசூல் செய்யப்பட்ட தொகை ... ... ... | 890 - 10 - 0 |
| அதன் செலவு ... ... | 665 - 5 - 7 |
| இருப்பு ... ... | 225 - 4 - 5 |
| உபந்யாஸ ஸம்பத்தமாக வசூல் செய்யப்பட்ட தொகை ... ... ... ... | 70 - 0 - 0 |
| செலவு ... ... | 69 - 12 - 0 |
| இருப்பு ... ... | 0 - 4 - 0 |
| ஆக வர்ஷாந்தத்தில் மொத்தம் இருப்பு ... | 431 - 4 - 0 |

இதன் விவ்ரம் ஆடிடருடைய அறிக்கையுடன் அடுத்தபக்கத்தில் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கின்றது.

# Sri. V. S. Sabha,

## Abstract of Receipts and Disbursements for the Year ending 30th September, 1917.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Opening balance ... | | | | 207 | 9 | 9 |
| 1 | Subscription :— | | | | 1012 | 14 | 0 |
| 2 | Sri Vedanta Dipika ... <br> Subscription 3 × 3 = 9 0 0 <br> Do (arrears) 6 × 2 = 12 0 0 | 21 | 0 | 0 | | | |
| | Recovery of Postage ... | 18 | 9 | 0 | | | |
| | Sale of back numbers ... | 31 | 12 | 0 | | | |
| | Advertisements ... | 15 | 0 | 0 | | | |
| | Sale of reprints ... | 9 | 0 | 0 | 95 | 5 | 0 |
| 3 | Pandit Sambhavam Fund ... | | | | 70 | 0 | 0 |
| 4 | Conference Donations ... | | | | 890 | 10 | 0 |
| 5 | Suspense account (amount received from the Tirupati Branch kept in suspense for want of details) | | | | 25 | 0 | 0 |
| | | | | | 2301 | 6 | 9 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Sri Vedanta Dipika :— | | | | | | |
| | 1. Printing ... | 337 | 2 | 9 | | | |
| | 2. Paper ... | 290 | 13 | 6 | | | |
| | 3. Carriage hire ... | 10 | 10 | 0 | | | |
| | 4. Binding ... | 21 | 2 | 0 | | | |
| | 5. Gum Paste ... | 0 | 11 | 9 | | | |
| | 6. Postage ... | 129 | 11 | 3 | | | |
| | 7. Cooly ... | 6 | 2 | 3 | | | |
| | 8. Proof reading ... | 69 | 0 | 0 | 865 | 5 | 6 |
| 2 | Printing Charges ... | | | | 41 | 4 | 0 |
| 3 | Postage and Telegram ... | | | | 32 | 5 | 4 |
| 4 | Clerical Charges ... | | | | 168 | 0 | 0 |
| 5 | Stationery and Books ... | | | | 5 | 7 | 4 |
| 6 | Furniture ... | | | | 6 | 4 | 0 |
| 7 | Pandits remuneration ... | | | | 5 | 3 | 0 |
| 8 | Pandit Sambhavana Fund .. | | | | 69 | 12 | 0 |
| 9 | Conference Expenses ... | | | | 665 | 5 | 7 |
| 10 | Advance recoverable (Reprinting address from Sri. V. Dipika) ... | | | | 11 | 4 | 0 |
| | Total ... | | | | 1870 | 2 | 9 |
| | Closing balance ... | | | | 431 | 4 | 0 |
| | Grand Total ... | | | | 2301 | 6 | 9 |

Sri. V. S. Sabha
Mylapore, 20-10-17.

Audited & found correct,
P. S. Rangaramanuja Iyengar,
*Auditor*. 13-12-17.

S. Vasudevacharriar.
T. Kothandarama Iyengar.
*Secretaries*. 20-10-17.

MYLAPORE,

13th December, 1917.

To,

The Secretaries,

Sri V. S. Sabha,

Mylapore.

Sir,

In accordance with the resolution of the Board communicated to me in your letter of the 21st of August last, I have the pleasure of submitting my Audit Report on the accounts of the Sabha for the year ending 30th September, 1917.

I have satisfied myself that the accounts are kept correctly, by checking the receipts, counterfoils, disbursements, vouchers with the Cash Book, as also the postings of the Personal and Impersonal Ledgers of the Sabha.

The Statements of Receipts and disbursements for the year as exhibited by the Secretary is correct. The State of affairs of the Sabha on the last day of the year can be better gauged and the members will be in a better position to understand the real situation if a Balance sheet and a Profit and Loss Account for the Vedanta Dipika be prepared and certified to by the Auditor at least for the information of the members of the Board though not for publication along with the Annual Report. I would have myself done the work had it not been for the fact that there had already been much delay in my Audit owing to my ill-health and subsequent absence from town.

Receipts and Disbursements Statement:- This statement is supposed to show the accounts of the Vedanta Dipika separately as per Rule 21 of the Sabha Rules and as such item (2) in

the Receipt side and item (1) in the Disbursement side are headed Sri Vedanta Deipika. As it is, the statement shows a loss of Rs. 770—0—6 (865—5—6 minus Rs. 95—5—0) during the year owing to the publication of the Dipika: but that should not be taken as the real state of affairs, The subscription to the Dipika should be taken as Rs. 3/- for non-member subscribers and Rs. 2/- for all the members(First and Second Class) as is implied in the same rule 21 of the Sabha. Thus the receipts for Vedanta Dipika will be increased by at least Rs. 637 (Rs. 612 for the 306 members and Rs. 25 for the Tirupati Section now held under Suspense Account) as well as by the arrears of subscription to be collected as Assets recoverable. Half the clerical charges at least should also be debited to this account. Considering the high prices of paper ruling in the market the result achieved by the publication of the Sri. V. Dipika is most creditable to the Board and specially to the Secretary who has so economically managed the concern.

On the whole the accounts are neatly and satisfactorily kept. Certain minor irregularities noticed in the course of Audit are embodied in the Note to the Secretary for his information and necessary action.

I thank the Board for the honour done in appointing me to Audit the accounts of the Sabha and Mr. S. Vasudevachariar for his kindness and courtesy. I should also thank the clever accountant of the Sabha Mr. C. V. Govindachariar for the willing assistance rendered to me during my Audit.

Yours faithfully,

P. S. Rangaramanuja Iyengar

Auditor.

ஸ்ரீ:.

# சில விசேஷ குறிப்புகள்.

## (1)

## திருக்குடந்தை ஸ்ரீ சித்தண்ணு ஸுந்தர தாதாசார்யர்.

திருக்குடந்தை ஐயங்கார் வீதியில் பஹு காலமாக அதி ப்ரஸித்தியுடன் எழுந்தருளியிருந்த ஸ்ரீ சித்தண்ணு ஸுந்தர தாதாசார்யர் என்னும் ஸ்வாமி, சென்ற மார்கழிமீ 24-உ திங்கள் கிழமை திநம் பரமபதத்தை அடைந்தார் என்று கேட்டு நாம் மிகவும் துக்கிக்கிறோம். அந்த ஸ்வாமியின் யோக்யதையையும் கல்யாண குணங்களையும் ஸாக்ஷாத்தாக நாம் அநுபவிக்காமலிருந்த போதிலும், கர்ணகர்ணிகமாக அவைகளைப்பற்றி பஹுஶ: கேட்டிருக்கிறோம். இந்த ஸ்வாமிக்கு அநந்தஶயநம் முதலான பல விடங்களில் அநேக ஸ்ரீவைஷ்ணவ ஶிஷ்யர்கள் இருக்கிறார்களென்றும், இவ்விடங்களிலும் பல ஸ்ரீவைஷ்ணவர்கள் இவரை ஆசார்யத்வேந வரித்து ஆத்மோஜ்ஜீவந உபாயாநுஷ்டாநாதிகளை இவர் த்வாரா செய்துகொண்டிருக்கிறார்களென்றும், அநேக மஹாராஜர்களால் பஹு ப்ரகாரமாக இவர் ஸம்மாநிக்கப்பட்டவரென்றும், யோக்யதா விஷயத்திலும் கர்மாநுஷ்டாநாதிகளிலும் அஸத்ருஶராக எழுந்தருளியிருந்தாரென்றும் நமது ஆப்தர்கள் சொல்லுகிறார்கள். அம்மாதிரியான வைதிகஶிரோமணி இந்தவிபூதியை விட்டு அந்தர்தாநத்தை அடைந்து விட்டாரென்பது தான் நமது ஶோகத்தின் ஹேது. உண்மையாகவே, ஜகத்தின் ஸ்திதி, இப்படிப்பட்ட ஸாத்விகர்களின் ஸத்தையை ஆஶ்ரயித்தே நிற்கிறது. அவர்கள், ஜகதுஜ்ஜீவநத்திற்குக் காரணமாகத் தென்படும் எவ்வித பாஹ்ய வ்யாபாரத்தையும் செய்யாமல் கேவலம் நிவ்ருத்தி மார்க்கத்தை ஆஶ்ரயித்தவர்களாக எழுந்தருளியிருந்த போதிலும், அவர்களுடைய ஸாந்நித்யமே ஜகத்திற்கு அஸாதாரணமான பரிஶுத்தியைச் செய்து கொண்டு ஜநங்களுக்கு சித்த

பக்த்தியையும் ஸன்மார்க்க ப்ரவ்ருத்தியையும் ஜநிப்பிக்கின்றது என்பதை எல்லாரும் உணர்ந்திருக்கலாம்.

அகிஞ்சித் விக்லவாநாம் ஸாது தே ச்ரேயஸே ந்ருணாம் ।
தர்சநம் கிம் விநா த்ரவ்யம் வைதிக ச்ரீயதே ஜநஃ ॥

இம்மாதிரியான மஹான்களுடைய நிர்யாணத்தினால் ஜகத்துக்கு ஸம்பவிக்கும் க்ஷோபத்தை அபார கருணாநிதியாயுள்ள ஸ்ரீபகவானே, ப்ரகாராந்தரத்தினால் நிவ்ருத்திப்பான் என்னும் நம்பிக்கை தான் நமக்கு ஆச்வாஸ ஜநகம்.

## (2)

## கொடியாலம் ஸ்ரீ சேஷாத்ரி ஐயங்கார்.

ஸ்ரீரங்கத்தில் அத்யந்தம் ஆஸ்திகராகவும் அதிமாத்ரம் தர்மத்தில் அபிநிவிஷ்டராகவும் ஸாத்விகரான ஸ்ரீவைஷ்ணவர்களெல்லாருக்கும் மஹோபகாரகராகவும் ஸ்ரீரங்கநாதன் திருவடியையே தஞ்ஜமாக ஆச்ரயித்தவராகவும் எழுந்தருளியிருந்த கொடியாலம் ஸ்ரீசேஷாத்ரி ஐயங்கார் என்னும் ப்ரபுவும் சென்ற மார்கழி மாஸம் ஆரம்பத்தில் பரமபதத்தை அடைந்து விட்டாராம். இதுவும் மிக்க சோகத்தற்கு ஹேதுவாகின்றது. 'ஜாதஸ்ய மரணம் த்ருவம்' என்கிறபடி பிறந்தவருக்கெல்லாம் இறப்பு நிச்சயமேயாயினும், நல்லோர்கள் நஷ்டரானால் மநஸ் வ்யாகுலத்தை அடைவது ஸஹஜமே. ஸ்ரீரங்கத்தில் தநிகரான ப்ரபுக்கள் பலர் இருக்கையிலும், இவருடைய அந்யாத்ருசமான ஆர்ஜவம் ஔதார்யம் முதலிய குணங்களால் இவருக்கே மிக்க ப்ரஸித்தி உண்டாயிற்று. சத்ருக்கள்கூட விச்வஸிக்கும்படி அவ்வளவு பாப பீருவாக இருந்தார். மாநாவமாநங்களைத் துல்யமாகவும் ஜகத்தை த்ருணம்போலவும் பாவிக்கும் துஷ்டர்கள்கூட இவரைக் கண்டால் சற்று அஞ்சியே நடப்பார்கள். ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதியின் தர்மகர்த்ருத்வத்தில் இவருக்கு பஹுகாலமாக அந்வயமுண்டு. இதர ஸ்தலங்களிற்காட்டிலும் அந்தத் தேவ ஸ்தாநத்தில் தர்மம் அதிக த்ருப்திகரமாக நடந்து வந்ததற்கு இவருடைய ஸம்பந்தமே முக்கியமான காரணம். ஆஸ்திக்ய புத்தியும் வைதிக மார்க்கத்தில் நோக்கும் இவருக்கு த்ருடமாக இருந்தன. பாப

மார்க்கமென்பதைச் சற்றேனும் அறியாத ஸுத்தமான வ்யக்தி. ஸ்ரீபகவாந் அவர் விஷயத்தில் பூர்ணமான அநுக்ரஹத்தைச் செய்வாரென்றே நம்புகிறோம். இரண்டு வர்ஷகாலமாக நமது ஸபையில் இவர் கார்ய நிர்வாஹகத்வ ஸம்பந்தத்தைப் பெற்றிருந்தார். அவருடைய ஸம்பந்தத்தால் நமக்கு ஒரு ஏற்றமும் ஜநித்திருந்தது. அப்படிப்பட்டவருடைய வியோகம் நமக்கு நேர்ந்ததும் பகவத் ஸங்கல்பமே.

மயிலாப்பூர்,<br>
தைமீ 1உ. } ஸ்ரீ. வாஸுதேவதாஸ:.

---

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# ஏழாவது ஸ்ரீவைஷ்ணவ மஹாஸங்கம்.

மதிராஸ் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் ப்ரவ்ருத்தியின்பேரில் ப்ரதி ஸம்வத்ஸரம் நடைபெற்று வரும் ஸ்ரீவைஷ்ணவ மஹா ஸங்கமானது, இவ்வர்ஷத்தில், தஞ்சாவூருக்கு ஸமீபத்திலுள்ள திருக்கண்டியூர் என்னும் திவ்ய தேசத்தில் சென்ற மார்கழி மாஸம் 12, 13, 14-ம் தேதிகளில் (1917 டிஸம்பர் 26, 27, 28) மிகச் சிறப்புடன் நடைபெற்றது. ஊதர் வருஷம் போலவே இந்த வர்ஷத்திலும் அநேக வைதிக லௌகிக ஆஸ்திகர்கள் அக்காலத்தில் அவ்விடத்தில் ஸந்நிஹிதர்களாக இருந்து, ஸங்கஸம்பந்துங்களான ஸகல கார்யங்களையும் மிகுந்த ஶ்ரத்தையுடன் நிர்வஹித்து வந்தார்கள். இவ்வர்ஷத்தின் ஆதித்யத்தை ஏற்றுக்கொண்ட திருவையாறு ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்த ஸபையார் இது விஷயத்தில் எடுத்துக்கொண்ட பரிஶ்ரமம் இவ்வளவுதான் என்று பரிச்சேதிக்கக் கூடாததாகவே இருந்தது. அப்யாகதர்களாயிருந்த பாகவதர்களை உபசரிப்பதில் அவர்களுக்கு இருந்த உத்ஸாஹம் அங்கு வந்திருந்த எல்லாருக்கும் மிக்க ஆநந்தத்தை விளைவித்தது. நிர்மல மநஸ்கர்களாய் கைங்கர்யத்

தில் மிகுந்த உத்ஸாஹத்துடன் ஒன்று சேர்ந்த இந்தப் பாகவத ஸம்ருத்தியும், 'ஸ்வாத்யாய: ஸாஹ்வா' என்கிறபடி பகவத் ஸம்பந்தமான கதா ப்ரவசநத்தில் அதிமாத்ரம் ஆநந்தத்துடன் அந்தஸங்கத்தை அலங்கரித்த வித்வத்கோஷ்டியும், அந்தப் பகவத் கதைகளைக் கேட்பதில் அத்யந்தம் குதூஹலிகளாய் அங்கு சேர்ந்திருந்த ஆஸ்திக ப்ரோதாக்களின் பெருமையையும், யத்ரூஹா ஸூக்ருதமடியாக அக்காலத்தில் ஸ்ரீ ஹரஸாபஹரன் அவ்விடத்தில் கண்டருளின உத்ஸவ ஸம்பத்தும், இவை யெல்லாம்

"கூம் வெத்வ ஸீஉஸி தவாஷி ஸீவதஶ்வூ
கூயநூஸீ ஹக்திரநவா கஸிஶௌஸூநாய ! ।
ஸஂஸ்ரஜ்ஞெத வயதீ ஊாஸஜநஸதீபஃ
ஸஂஸார வஷ ஹமவநூவவமத் வவ ॥ ॥"

என்னும் ஸ்ரீ ஸூக்தியின் அர்த்த தத்வத்தை நன்றாக நிரூபித்தன. உண்மையாகவே, அங்கு ஸந்நிஹிதர்களாயிருந்த பலருடைய மனத்தில், அக்காலத்தில், 'இந்த ஸம்பத் மூன்று திநங்களுடன் முடிந்துவிடுகிறதே! ஸதா ஸௌரிசிந்தா அபிமுகர்களான இந்த ஜந ஸம்வாஸமாகிற ப்ரேயஸ்ஸை எப்பொழுது பராஸ்வதமாக நாம் பெறப்போகிறோம்?' என்னும் எண்ணும் உதித்ததென்றே சொல்லலாம்.

சென்ற ஸம்வத்ஸரத்தில் செய்திருந்த வ்யவஸ்தைப்படி இந்த ஸங்கம் இவ்வர்ஷத்தில் ஸ்ரீ காஞ்சீபுரத்தில் சேர்ந்திருக்க வேண்டியது. ஆனல், அவ்விடத்தில் பஶீயஸ்ஸான சில அநுபபத்திகள் ஸம்பவித்துவிட்டபடியால் ஸ்தலாந்தரத்தைப் பற்றி ஆலோசிக்கும்படி நேர்ந்தது. 'எவ்விடத்திற்குப் போகலாம்? இந்த ஆதித்யத்தை யார் ஏற்றுக்கொள்ளப் போகிறார்கள்?' என்று ஸபாப்ரவர்த்தகர்கள் சிந்தா க்ரஸ்தர்களாயிருந்த காலத்தில், ஸ்ரீ ஹரபாபஹரன், தஞ்சாவூர் ஸ்ரீ. உப. கோதண்டராம ஐயங்காரையும் திருவையாறு ஸ்ரீ. உப. வேதாந்தாசார்யரையும் நிமித்தமாகக்கொண்டு அந்தச் சிந்தையை நிவ்ருத்திசெய்து கீழ்ச்சொல்லியிருக்கிறபடி இந்த ஸங்கத்தைத் தானே உகந்தருளினன்

இதன் வைதிக ஸம்பத் ஒரு விதத்திலும் லோபத்தை அடையக்கூடாதென்று போல, வைதிக விதவான்களுள் மிக ப்ரஸித்தரான திருக்குடந்தை ஸ்ரீ உப. சேஷாசார்யருடைய அக்ராஸநாதிபத்யத்தையும் அதற்கு ஸம்பாதித்து வைத்தான். அந்த ஸ்வாமியின் ஸாந்நித்யமும் அவரால் செய்யப்பட்ட சிறந்த உபந்யாஸமும், அந்யதா, நமக்கு துர்லபங்களாகவே நேர்ந்திருக்கும். ஸ்ரீ. உப. புது அக்ரஹாரம் ஸ்ரீநிவாஸ மாதவாசார்யர், ஸ்ரீ. உப. வாஜபேயம் வீரராகவ தாதாசார்யர், ஸ்ரீ. உப. ஸ்வச்சந்தம் ஸ்ரீநிவாஸாசார்யர், ஸ்ரீ. உப. இஞ்சிமேடு ரங்கநாதாசார்யர், ஸ்ரீ.உப புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர், ஸ்ரீ. உப. நவநீதம் க்ருஷ்ணமாசார்யர் ப்ரப்ருதிகளான வைதிக பண்டித ரத்நங்களுடைய கடாக்ஷம் இந்த ஸதஸ்ஸுக்கு ஸம்பவித்ததும் ஸ்ரீஹர சாப ஹரனுடைய அநுக்ரஹமே. மேன்மேல் இந்த வைதிக ஸ்ரீ அபிவ்ருத்தமாகி இந்த ஸதஸ்,வைதிக ப்ராதாந்யத்தைப் பெறவேணுமென்பதுதான் அதன் ஹிதத்தை இச்சிக்குமவர்களின் ஹார்த்தமான ப்ரார்த்தனே.

சென்ற ஸம்வத்ஸரத்தில் இந்த ஸங்க ஸம்பத்தமாக ஒரு வித்வத் ஸதஸ் உபக்ரமிக்கப்பட்டது என்பது தீபிகாபிமாநிகளெல்லோருக்கும் தெரிந்த விஷயம். நமது வைதிக வித்யாபிவ்ருத்தியே அந்த வித்வத் ஸதஸ்ஸின் முக்கியமான நோக்கமானதால், இந்த ஸம்வத்ஸரத்தில் அந்த ஸதஸ்ஸை சில பரிகணிதர்களான பரீக்ஷகர்களைக்கொண்டு பரீக்ஷா ரூபகமாக நடத்தி வித்வான்களுக்கு ஸம்மாநம் செய்தால் வித்யா ப்ரசாரம் நன்கு ஸம்பவிக்குமென்று எண்ணி ஸபா ப்ரவர்த்தகர்கள் அந்தமாதிரி ஒரு நிர்ணயத்தைச் செய்தார்கள். அதை அநுஸரித்து ஸ்ரீ விஶிஷ்டாத்வைத வேதாந்தத்தில் ஒரு பரீக்ஷை நடத்தப்பட்டது. ஏழு வித்வாந்கள் அதில் பரீக்ஷ்ய கோஷ்டியில் அந்வயித்தார்கள். அவர்களுக்கு யதோசிதம் ஸம்மாநங்களும் செய்யப்பட்டன. போதுமான அர்த்தம் கிடைக்காததால்தான் ஸ்ரீ பாஷ்யத்தில் மாத்ரம் இவ்வர்ஷத்திய பரீக்ஷை ஸங்குசிதமாக இருந்தது. வருகிற ஸம்வத்ஸரத்தில் வைதிக வித்யை முழுவதிலும் பரீக்ஷையை நடத்தி வித்வான்களுக்குப் பூர்ண ஸம்மாநம் செய்யும்படியான யோக்யதையை ஸ்ரீ பகவான் ஸங்கல்பிப்பன் என்று நம்புகிறோம்.

ப்ரக்ருத ஸங்க விஷயமாக, அதன் ஸகல பாரத்தையும் வஹித்து அதை நிர்விக்நமாக நடத்திவைத்த சுஸஶாதிய௰ிகரூத்துக்களான திருவையாறு, தில்லஸ்தாநம், புது அக்கிரகாரம், கல்யாணபுரம், ராயம் பேட்டை, திருக்கண்டியூர் முதலிய திவ்யதேசத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்வாமிகளெல்லாருக்கும் நம்முடைய க்ருதஜ்ஞதாவிஷ்கரணத்தை வசத்வாரா நாம் செய்கிறோம். அதை அவர்கள் திருவுள்ளம் பற்றி, ஜ்ஞாநதோ வா அஜ்ஞாநதோ வா ஏதாவது அபசாராதிகள் ஸம்பவித்திருந்தால் அவைகளை க்ஷமித்து க்ருபையுடன் ஸப்யர்களெல்லாரையும் அநுக்ரஹிக்க வேணுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸங்கத்தைப் பற்றிய மற்றை அம்சங்களும் ஸங்கத்தில் பண்டிதர்களாற் செய்யப்பட்ட உபந்யாஸங்களும் தீபிகையில் க்ரமஶ: ப்ரசுரம் செய்யப்படும். இந்த ஸஞ்சிகையில், அக்ராஸநாதிபதியின் உபந்யாஸத்தில் ஒரு பாகம் மாத்ரம் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கின்றது.

மயிலாப்பூர்,
பிங்கள௵
தைமீ 1உ

ஸ்ரீ. வாஸுதேவதாஸ:.

## ஶுத்தாஶுத்தி பத்ரிகா.

("ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தம்" என்னும் இந்த உபந்யாஸத்தில் ப்ரமாதத்தால் சில அச்சுப்பிழைகள் ஸம்பவித்திருக்கின்றன. அவைகளைப் பின்வருமாறு ஶோதித்துக் கொள்ளவேணும்.)

| | | | | அஶுத்தம். | ஶுத்தம். |
|---|---|---|---|---|---|
| பக்கம் | 1 | வரி | 12 | ஸம்ருத்திஶாலி | ஸம்ருத்திபூர்ணஶாலி |
| ,, | ,, | ,, | ,, | வைத்ரியஜ்ஞ | த்ரியஜ்ஞ |
| ,, | 2 | ,, | 8 | ப்ரதீ: | ஸ்ருதி: |
| ,, | 5 | ,, | 4 | நாராயண: | நாராயண |
| | | | ,, | ஸ்ரீஶு | ஹ்ரீஶு |
| ,, | 6 | ,, | 24 | ஸபை | ஸபைத்திற்கு |
| ,, | ,, | ,, | 25 | அபலபிக்கிறார்கள் | அங்கீகரிக்கிறார்கள் |
| ,, | 7 | ,, | 11 | ஶிஷ்யர்கள் | ஶிஷ்யராயும் |
| | | | ,, | ராமக்ருஷ்ணாவதாரமான | ராமக்ருஷ்ணாவதாரமுமான |
| ,, | ,, | ,, | 14 | ப்ராசுர்யத்தையும் தத்த்ரவ்யஸத்பத்வத்தையும் மாத்ரம் | ப்ராசுர்யத்தை மாத்ரம் |
| ,, | ,, | ,, | 19 | நிராகரிக்கிறார்கள் | நிராகரிக்கிறார் |
| ,, | ,, | ,, | 20 | ஶிஷ்யர்கள் | ஶிஷ்யரும் |
| | | | ,, | அவதாரமான | அவதாரமுமான |
| ,, | 8 | ,, | 4 | அநாதரிக்கிறார்கள் | அநாதரிக்கிறார் |
| ,, | ,, | ,, | 23 | அநபெக்ஷமாக | அநபேக்ஷமாக |
| ,, | ,, | ,, | 28 | தாஸந | தாஸ |

ஸ்ரீ:.

# ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின்

## சந்தா வரவு. (1917 - டிசம்பர் மாஸம்)

| | | | |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ. உப. | கொ. சேஷாத்ரி அய்யங்கார், ஸ்ரீரங்கம் ... | 5 0 0 |
| 2. | ,, | என். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், அய்யம்பேட்டை | 3 0 0 |
| 3. | ,, | வி. துரைஸ்வாமி அய்யங்கார், சேலம் ... | 3 0 0 |
| 4. | ,, | எம். எஸ். இரங்கஸ்வாமி அய்யங்கார், கோயம்புத்தூர் | 3 0 0 |
| 5. | ,, | எஸ். கெ. இரங்கஸ்வாமி அய்யங்கார், லக்ஷ்மிபுரம், ... | 3 0 0 |
| 6. | ,, | டி. ஆர். சாரங்கபாணி அய்யங்கார், மயிலாப்பூர் ... | 3 0 0 |
| 7. | ,, | கெ. திருவேங்கடாசாரியார், சேரங்கொளம் ... | 5 0 0 |
| 8. | ,, | வ. கோபாலஸ்வாமி அய்யங்கார், மயிலாப்பூர் ... | 3 0 0 |
| 9. | ,, | ஸ்ரீ வெங்கடாசாரியார், கும்பகோணம் ... | 5 0 0 |
| 10. | ,, | ஆர். கே. வேணுகோபாலநாயுடு, கூடலூர் ... | 3 0 0 |
| 11. | ,, | ஆர். வி. கிருஷ்ணமசாரியார், கும்பகோணம் ... | 3 0 0 |
| 12. | ,, | T. ஸ்ரீனிவாஸய்யங்கார், திருவாரூர் ... | 3 0 0 |

| | | | |
|---|---|---|---|
| 13. | ,, | வி. இராஜகோபாலாசாரியர், சித்தூர் ... | 5 0 0 |
| 14. | ,, | கே. எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், நாகப்பட்டணம் ... ... ... | 5 0 0 |
| 15. | ,, | வி. எஸ். வெங்கடாசாரியர்ர், பொல்லாச்சி ... | 3 0 0 |
| 16. | ,, | எஸ். இராகவய்யங்கார், திருநெல்வேலி ... | 3 0 0 |
| 17. | ,, | ராவ். சாஹேப். டி. நம்பெருமாள் செட்டியார், சேத்துபட்டு ... ... ... | 5 0 0 |
| 18. | ,, | ரா. இரங்காசாரியார், பம்பாய் ... ... | 3 0 0 |
| 19. | ,, | டி. பாஷியம் அய்யங்கார், கல்கத்தா ... ... | 3 0 0 |
| 20. | ,, | ஆர். நரசிம்ம அய்யங்கார், திருவல்லிகேணி ... | 5 0 0 |
| 21. | ,, | மோ. நரசிம்ம அய்யங்கார், மோஹனூர் ... | 5 0 0 |
| 22. | ,, | டி. கோதண்டராமய்யங்கார், தஞ்சாவூர் ... | 5 0 0 |
| 23. | ,, | வி. திருமலே அய்யங்கார், சாவுகார்பேட், மதராஸ் ... | 3 0 0 |

## வித்வத் ஸதஸ் சந்தா வரவு.

| | | | |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ. உப. | வி. துரைஸ்வாமி அய்யங்கார் சேலம் ... | 3 0 0 |
| 2. | ,, | சி. வி. கிருஷ்ணஸவாமி அய்யங்கார் கிஜெல்லா ... | 3 0 0 |
| 3. | ,, | வி. இராஜகோபாலாசாரியர் பெங்களூர் ... | 5 0 0 |
| 4. | ,, | எஸ். வாசுதேவாசார்ரியார் மயிலாப்பூர் ... | 10 0 0 |
| 5. | ,, | என். கே. சடகோபாசாரியர் மயிலாப்பூர் ... | 2 0 0 |
| 6. | ,, | கோ. சேஷாத்ரி அய்யங்கார் ஸ்ரீரங்கம் ... | 10 0 0 |
| 7. | ,, | டி. ராஜகோபாலாசாரியர் வண்ணூர்பேட்டை ... | 5 0 0 |
| 8. | ,, | ஏ. சேஷாத்ரி அய்யங்கார் கடப்பை ... | 1 0 0 |
| 9. | ,, | கெ. திருவேங்கடாசாரின்ர் சேரங்கோளம் ... | 2 0 0 |
| 10. | ,, | டி. எஸ். ஸ்ரீனிவாஸா ராகவாசார்லு மசூலிப்பட்டணம் ... ... ... ... | 2 0 0 |
| 11. | ,, | சி. வரதாசாரியார் வேலூர் ... | 2 0 0 |
| 12. | ,, | வி. இரங்கஸ்வாமி அய்யங்கார் திருப்பதி ... | 2 0 0 |
| 13. | ,, | ராவ். சாஹேப். டி. நம்பெருமாள்செட்டி சேத்துப்பட்டு ... ... ... ... | 10 0 0 |
| 14. | ,, | இராகவய்யங்கார் கரூர் ... ... ... ... | 3 0 0 |
| 15. | ,, | கெ. வீராஸ்வாமி அய்யங்கார், நாமக்கல் ... | 2 0 0 |
| 16. | ,, | வ. கோபாலஸ்வாமி அய்யங்கார், மயிலாப்பூர் ... | 2 0 0 |
| 17. | ,, | ஸ்ரீவெங்கடாசாரியார், கும்பகோணம் ... | 5 0 0 |
| 18. | ,, | எஸ். சக்ரபாணி அய்யங்கார், நத்தம் மதுரை ... | 2 0 0 |
| 19. | ,, | ந. இராஜகோபாலாசாரியார், மயிலாப்பூர் ... | 2 0 0 |
| 20. | ,, | எஸ். வரதாசாரியார், திருவல்லிக்கேணி ... | 2 0 0 |
| 21. | ,, | டி, ஸ்ரீனிவாஸய்யங்கார், திருவாலூர் ... | 2 0 0 |
| 22. | ,, | மை. ஸ்ரீனிவாஸாசாரியார், திருப்பதி ... | 1 8 0 |
| 24. | ,, | எஸ். வரதாசாரியார், மயிலாப்பூர் ... | 15 0 0 |
| 23. | ,, | கே. வி. கோபாலதேசிகாசாரியார், மயிலாப்பூர் ... | 2 8 0 |
| 25. | ,, | வி. ஸ்ரீநிவாஸாசாரியார், சிந்தாத்ரிபேட்டை ... | 1 0 0 |
| 26. | ,, | கே. எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் நாகப்பட்டணம் ... ... ... ... | 10 0 0 |
| 27. | ,, | ஏ. வி. கோபாலாசாரியார், ஸ்ரீரங்கம் ... | 10 0 0 |
| 28. | ,, | ஆர். கிருஷ்ணமாசாரியார், மாதவபுரம் . | 5 0 0 |
| 29. | ,, | டி. கோதண்டராமய்யங்கார், தஞ்சாவூர் ... | 10 0 0 |

50 சாமான்கள் இனும்!! 50 சாமான்கள் இனும்!!

## அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்ற

# ராஜ சுந்தரி ரோஜா.

## கூந்தல் வளரும் பரிமளத்தைலம்.

**50 இனும் சமாகளுடன் டின் 1-க்கு நுபா 1—0—0**

தலைமயிர் அழகாய் இருக்கவேண்டுமென்று விரும்பும் ஸ்திரிகளும், தலை மயிர் உதிர்ந்து போகாமலிருக்க வேண்டுமென்று விரும்புகிற ஸ்திரிகளும் சாதாரணமாய் கடைகளில் கிடைக்கக் கூடிய இழிவான எண்ணெய்களை உப யோகிக்காமல் எங்கள் தைலத்தின் மதுராதார முடைய பரிமளத்தைத் தெரிந்து அவைகளை வாங்கி உபயோகிக்கவும். இதின் பரிமளம் சொல்லவும் எழுதவும் முடியாது. தலையில் தடவி சீவிக்கொண்டால் அக்கம்பக்கம் வீடுகளும் இதின் வாசனை வீசும். கூந்தலை நீள்மாள் வளரச் செய்யும். மூளையின் கொதிப்பைத் தணித்து கண்களுக்கு குளிர்ச்சியைத் தரும் சிரசிலுள்ள பல நோய்களையும் நிவர்த்தி செய்து கண்களில் நீர்வடிதல், தலையில் சுண்டப்புண் மயிர்வெடிப்பு, மயக்கம், தலைவலி, சொறிசிரங்கு மனோ வியாகூலம் ஆகிய இவைகளைப் போக்கடித்து தேக ஆரோக்கியம் தரும் இதுவென்றுதான். 1-புட்டி தருவித்தால் இதின் அருமை தெரியும். அனேக நற்சாட்சிப்பத்திரங்களும் பெற்றிருக்கிறது. இது தேசமெங்கும் நல்ல பெயர் பெற்றிருப்பதே இதின் புகழ்ச்சிக்கு அத்தாட்சியாகும்.




இனும் சாமான்களின் விபரம்:—ஸ்திரீகள் தலையில் அணியும் கொண்டைக்கிளி 6. குங்குமச்சிமிழ் 1. மைச்சிமிழ் 1. அழகான முகம்பார்க்கும் கண்ணாடி 1. தாம்பூலமாத்திரைகள் 30. தந்தச்சீப்பு 1. ராஜாராணி கார்னேஷன் பெட்டி 1, ரவிவர்மா படங்களுள்ள போஸ்டு கார்டுகள் 6. அத்தர் பில்லை 1. சந்தனபில்லை 1. ஸ்திரீகள் மார்பில் அணியும் ராஜாராணி உள்ள அந்தமான புருக்ஸ் 1. ஆக 50.



# சர்வதேள் விஷ சஞ்சீவி.

கதரிவந்தவன் களிப்புடன் செல்வான்!

**விஷந்தீண்டினவன் நிமிஷத்திற் குணமடைவான்!!**

**குணமில்லாவிட்டால்**

**ரூபாய் 100 - இனும் கொடுக்கப்படும்!!!**

விலை பாக்கெட் 1-க்கு ரூ. 0 8 0

டசன் 1-க்கு ரூ. 5 0 0.

விலாசம்:—வி. எ. எஸ். பாணி,

நெ. 3, இருளப்பன் தெரு, மதராஸ்.

ஸ்ரீ:

# ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை

## மதிராஸ்.

---

### 1916-17-ம் வர்ஷத்திய எக்ஸிக்யுடிவ் போர்ட்

மெம்பர்களின் பெயர்.

| | | | |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ. உப. | கெ. ஸ்ரீநிவாச ஐயங்கார், | போஷகர்கள் |
| 2. | | ஆனரெபில் கெ. வி. ரங்கஸ்வாமி ஐயங்கார் | போஷகர்கள் |
| 3. | ஸ்ரீ. உப. | திவான் பஹதூர், டி. டி. ரங்காசார்யர் | ஸபாத்யக்ஷர். |
| 4. | ,, | ராவ் பஹதூர், எஸ். ராமஸ்வாமி ஐயங்கார். | ஸபாத்யக்ஷ ப்ரதிநிதிகள். |
| 5. | ,, | டி. ராஜகோபாலாசார்யர். | ஸபாத்யக்ஷ ப்ரதிநிதிகள். |
| 6. | ,, | எஸ். வாஸுதேவாசார்யர். | கார்யதர்ஸிகள். |
| 7. | ,, | டி. கோதண்டராம ஐயங்கார். | கார்யதர்ஸிகள். |
| 8. | ,, | ஸி. ராஜகோபாலாசார்யர், சித்தூர். | |
| 9. | ,, | டி. நரஸிம்ம ஐயங்கார், திருவல்லிக்கேணி. | |
| 10. | ,, | டி. அநந்தாசார்யர், விழுப்புரம். | |
| 11. | ,, | குமார சக்ரவர்த்தி ஐயங்கார், திருச்சி. | |
| 12. | ,, | வெ. இ. சின்னஸ்வாமி ஐயங்கார், செங்கல்பட்டு. | |
| 13. | ,, | டி. பி. ஸ்ரீநிவாஸாசார்யர், திருவெவ்வுளூர். | |
| 14. | ,, | ஆர். நரஸிம்ம ஐயங்கார், திருவல்லிக்கேணி. | |
| 15. | ,, | கே. ஏ. வீரராகவாசார்யர், மதிராஸ். | |
| 16. | ,, | ஸி. ஸ்ரீநிவாஸாசார்யர், திருவல்லிக்கேணி. | |
| 17. | ,, | டி. இ. சடகோபாசார்யர், கூடலூர். | |
| 18. | ,, | வி. ரங்காசாரியர், திருவல்லிக்கேணி. | |
| 19. | ,, | என். ரங்கஸ்வாமி அய்யங்கார், கர்னூல். | |
| 20. | ,, | எம். நரஸிம்மாசார்யர், நெல்லூர். | |
| 21. | ,, | ஸி. துரைஸ்வாமி அய்யங்கார், சித்தூர். | |
| 22. | ,, | டி. ஸ்ரீநிவாஸராகவாசார்யர், கோயம்புத்தூர். | |
| 23. | ,, | என். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், கும்பகோணம். | |
| 24. | ,, | எஸ். டி. கிருஷ்ண அய்யங்கார், மதுரை. | |
| 25. | ,, | கே. எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், நாகப்பட்டணம். | |
| 26. | ,, | பி. கே. கருடாசார்யர், மைசூர். | |
| 27. | ,, | பி. ஆர். க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், எழும்பூர். | |
| 28. | ,, | டி. ரங்கஸ்வாமி ஐயங்கார், சைதாப்பேட்டை. | |
| 29. | ,, | எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், மயிலாப்பூர். | |
| 30. | ,, | எஸ். வரதாசார்யர், மயிலாப்பூர். | |
| 31. | ,, | வித்தியாபூஷணம் எ. கோவிந்தாசாரியர், மைஸூர். | |
| 32. | ,, | ஸி. கோபாலாசாரியார், பூந்தமல்லி. | |